தென்கோவை

# கந்தையாப் பண்டிதர் கவித்திரட்டு

ஆ. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கோவை

# கந்தையாப் பண்டிதர் கவித்திரட்டு

மலாய் நாட்டு
இளைப்பாறிய உத்தியோகத்தர்
கொல்லன்கலட்டி
**உயர்திரு. ந. பொ. செ. இலங்கைநாயகம் அவர்கள்**
விரும்பியவாறு

சுன்னாகம்
கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.
தொகுத்தது

புலவரகம்
மயிலணி சுன்னாகம்
இலங்கை
1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரக வெளியீடு 21

உரிமை பதியப்பட்டது

விலை ரூபா 1-50

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

## I

அமிழ்தினுமினிய செய்யுள் நூல்களை இயற்றித் தமிழ் மொழிக்குப் புதுச்சுவையை அள்ளிக்கொடுத்து யாவரையும் அகமகிழச் செய்தவரும், 'வித்தகம்' என்னும் உத்தம போதப் பத்திரிகையின் சிறந்த ஆசிரியராக விளங்கியவருமாகிய தென்கோவை கந்தையாப் பண்டிதர் யாழ்ப்பாணத்திற் பரம்பரைப் புலமை வாய்க்கப்பெற்ற உயர் வேளாண்குடியிற் றோற்றிய சேனாதிராய முதலியார் வழித்தோன்றலாவர். 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்னும் முதுமொழிக்கேற்ப அவர் இளமையிற் கோவை சின்னப்பாபிள்ளை, ஊரெழு சரவணமுத்துப்புலவர், நல்லூர் சிற் கைலாயபிள்ளை முதலியார் முதலியோரிடம் தமிழ் கற்குங் காலத்திலேயே கவிபாடுவதில் இணையற்றவராக விளங்கினார். பின்னர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் முறையாகத் தமிழிலக்கிய விலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றுப் பூரண பாண்டித்தியம் அடைந்ததும் அவரை எல்லோரும் பண்டிதர் என்று அழைப்பாராயினர். கைமாறு கருதாது தமிழ்க்கல்வி கற்பித்த புலவரிடத்து அவர் என்றும் பெருநன்றி உள்ளவராக இருந்தனர் என்பதை அவர் புலவருக்கு எழுதிய பின்வரும் கடிதப்பகுதி நன்கு புலப்படுத்தும் :

"அடியேன் பிள்ளைமைக் காலந்தொட்டுச் சிலரிடம் தமிழ்நூல்களைக் கற்றேனெனினும், அத்தகைய அறிவின் மிகுதிப்பாடு சிறிதாவது அடையப் பெறுவதற்கு முக்கிய காரணராய், அரும்பெறல் ஆசிரியராய் விளங்கியவர்கள். தோன்முறை தெரிந்து சொன்முட்டறுத்துப் பொருள்காணும் பேராற்றல் வாய்ந்த வித்துவசிரோமணியும், அடியேன்பால் என்றும் மறவாத அன்புடையவர்களுமாய தாங்களே என்பது ஆபால கோபாலப் பிரசித்தம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் திறமை படைத்த பண்டிதரவர்கள் கொழும்பு அரசினர் கல்லூரியில் பத்து வருடங்கள் தலைமைப் பண்டிதராகவும், அரசாங்க வித்தியா கந்தோரில் நான்கு வருடங்கள் தலைமைத் தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றி எல்லோருடைய நன்குமதிப்பையும் பெற்றனர். பின்னர் 1922-ம் ஆண்டு நோய் காரணமாக அரசாங்க உத்தியோகத்தினின்றும் இளைப்பாறிச் சமயவாழ்க்கை வாழ விரும்பி இந்தியா சென்று தலயாத்திரை செய்து பிறவாநெறி யளிக்கவல்ல குருநாதனைத் தேடுவாராயினர். அவர் ஆற்றிய அருந்தவப் பேற்றின் விளைவாகப் புதுச்சேரியில் 'நந்தி' யென்னும் புனைபெயர் பூண்ட சித்தரொருவரைச் சந்தித்து, அவரருளுபதேசம் பெற்று அவர்வழி யொழுகுவாராயினர். அவர் போதித்த ஞானோபதேசங்கள் அனைத்தையும் 'வித்தகம்' என்னும் பத்திரிகை வாயிலாக உலகுக்கு வெளிப்படுத்தினர். வித்தகத்தில் வெளிவந்த கட்டுரைகளிற் பெரும்பாலன உண்மை முத்தியை நிலைநாட்டும் நோக்கத்தோடு எழுதப்பட்டன. அவற்றுட் சைவசமயம், எழுதாமறை, வேதாகமங்கள், நாதம், சகசநிட்டை, சாகாக் கல்வி, காமேசன், வேதாந்த சித்தாந்தம் முதலியன முக்கியம் வாய்ந்தன.

## III

முத்திவகை பலவிருப்பினும் குமாரதேவர் கூறிய "தூலத்தோடு மறைதலே உண்மைமுத்தி" என்னும் கூற்றை முழுமையும் ஏற்றுக்கொண்டு, பண்டிதர் தத்துவப் பெரியாராகிய சமயகுரவர், அறுபான்மும்மை நாயன்மார், சேந்தனுர், முத்துத்தாண்டவர் ஆண்டாள், நந்தனுர் முதலியோர் மாத்திரம் முத்தியடைந்தனரென்றும், வித்துவப் பெரியாராகிய சந்தான குரவரும் வேதாந்த குரவரும் உடலோடு மறையாது உடலைப் பிணமாக விழவிட்டுச்சென்ற காரணத்தால் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிநெறிப்பாற்பட்டு உண்மை முத்திநிலையை யடையாது போயினரென்றும் பல சாத்திரப் பிரமாணங்களோடு எடுத்து விளக்கினர். திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகர் தூத்துக்குடி பொ. முத்தையபிள்ளை அவர்கள் தத்துவப் பெரியாரைப் பற்றிப் பண்டிதர் கூறியதை ஏற்றுக்கொண்டு, வித்துவப் பெரியாரைப் பற்றிக் கூறியதை மறுத்துக் கண்டனம் எழுதினர். பண்டிதரும் அக்கண்டனத்திற்குத் தகுந்த மறுப்பை எழுதினர்.

## IV

பண்டிதர் இயற்றிய செய்யுள் நூல்கள் மிகச் சிலவாகும். அவை மூளாய் மூத்த விநாயகர் ஊஞ்சல், புதுவை மணக்குள விநாயகர் ஒருபா ஒருபஃது, புதுவை மணக்குள விநாயகர் பதிகம் I, II, புதுவை மாரிமுத்தம்மையார் பதிகம் I, II, மேலைக்கரம்பன் முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி, ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து முதலியன. இவற்றுள், மூளாய் மூத்த விநாயகர் ஊஞ்சல், கரம்பொன் முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி என்னும் இருநூல்களும் கடவுளருள் வழி நின்று பத்தியால் மனநெக்குருகிச் சந்தம் பொருந்த நுவல்தொறும் இன்பம் பயக்கும் ஆசிரியப்பாக்களால் இயற்றப்பட்டுள்ளன. புதுவை மணக்குள விநாயகர் பதிகங்களும், புதுவை மாரிமுத்தம்மையார் பதிகங்களும் சொல்லும் பொருளும் சுவைபடத் தரவு கொச்சகப் பாவினுல் இயற்றப்பட்டுள்ளன. மாரிமுத்தம்மையார் பதிகங்கள் சமாதிவைக்கப்பட்டிருந்த மாரிமுத்தம்மையார் 'புதுவைவாழ் சித்தன்' (நந்தி) அருளால் மீண்டும் உயிர்பெற்று எழுவார் என்ற பெருநம்பிக்கையோடு பண்டிதராற் பாடப்பட்டுள்ளன. மணக்குள விநாயகர் ஒருபா ஒருபதும், ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்தும், சிறப்புப்பாயிரங்கள் சிலவும் அகவற் பாக்களால் நன்கு அமைந்துள்ளன. பண்டிதருடைய அகவற்பாக்கள் சங்கப்புலவர்களுடைய பாக்கள் போன்று உணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகம், அணியழகு, எதுகை மோனைச் சிறப்பு, ஓசை நயம், செவ்விய சொற்சிறப்பு, எளிமை, அழகுடைமை, பொருளுடைமை முதலிய சிறப்புக்களெல்லாம் ஒன்றி யைந்து இனிமை மிக்குப் படிப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தன்மையன. ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்தைப் படித்தின்புற்ற சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராயிருந்த செல்வக் கேசவராய முதலியார் அவர்களும், திருச்சி பிஷப் கீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதரா யிருந்த ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் அந்நூலின் சிறப்பியல்புகளை நன்கு பாராட்டியுள்ளார் கள்.

## V

இக்கவித்திரட்டுக்கு வேண்டிய நூல்களைக் கொடுத் துதவிய பண்டிதரவர்களது மைத்துனர் திரு. தி சிவ குருநாதனவர்களுக்கும், இந்நூலை அச்சிடுங்காலத்தில் அச்சுப்படிவங்களைத் திருத்துதற்கு உதவிபுரிந்த செல்வன் செ. தியாகராசன் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி உரியதாகுக.

இந்நூல் வெளிவருதற்கு முக்கிய காரணராயிருந்த வர், மலாய்நாட்டிற் பல்லாண்டு உயர் அதிகார புருடரா யிருந்து இளைப்பாறித் தற்போது உபகாரச்சம்பளம் பெறுபவரும், சைவசமயத்தையும் செந்தமிழையும் வளர்த்தற்கண் தமது பொருளை வரையாது வழங்கும் வள்ளலும், உயர்குடிப் பிரபு சிகாமணியுமாகிய கொல் லன்கலட்டி உயர்திரு. ந. பொ. செ இலங்கைநாயகம் அவர்களாவர். இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய பொருளை உதவிய அன்னாருக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது. அவர் தீர்க்காயுளும் இட்ட சித்திகளும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

புலவரகம்
சுன்னாகம்
8-3-1972

குமுத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | மூளாய் மூத்த விநாயகர் திருவூஞ்சல் | 1 |
| 2 | புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் ஒருபா ஒருபது | 4 |
| 3 | புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் பதிகம் I | 25 |
| 4 | மேலைக்கரம்பன் முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி | 27 |
| 5 | மணிவாசகர் விழாமலர் வாழ்த்துரை | 31 |
| 6 | ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து | 37 |
| 7 | நகுலேச்சுர விநோத விசித்திரப் பூங்கொத்துச் சிறப்புப் பாயிரம் | 45 |
| 8 | சாணக்கிய நீதி வெண்பாச் சிறப்புப் பாயிரம் | 49 |
| 9 | இரகுவமிசப் புத்துரைச் சிறப்புப் பாயிரம் | 50 |
| 10 | தொல். சொல்லதிகார உரை விளக்கக் குறிப்புச் சிறப்புப் பாயிரம் (பாகம் II) | 52 |
| 11 | தொல். பொருளதிகார உரை விளக்கக் குறிப்புச் சிறப்புப் பாயிரம் (1-ம் பாகம்) | 56 |
| 12 | தொல். பொருளதிகார உரை விளக்கக் குறிப்புச் சிறப்புப் பாயிரம் | 58 |
| 13 | பிரசங்கரத்தின தீபச் சிறப்புப் பாயிரம் | 64 |
| 14 | புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் பதிகம் II | 65 |
| 15 | புதுவை மாரிமுத்தம்மையார் பதிகம் I | 67 |
| 16 | புதுவை மாரிமுத்தம்மையார் பதிகம் II | 69 |
| 17 | குமாரசுவாமிப் புலவர் பேரில் இரங்கற் பாக்கள் | 71 |
| 18 | தி. த. கனகசுந்தரம்பிள்ளை பேரில் இரங்கற் பாக்கள் | 73 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

பொய்தவிரு நெஞ்சமுளான் புலவரெலாங்
    கொண்டாடும் புலமை யாளன்
வய்யநிகழ் புகழாளன் வண்டமிழும்
    பிறமொழியும் மரபி னுய்ந்தோன்
கைதவமி லாதடியேற் கருங்கலைகள்
    பலதெரித்த கருணை யாளன்
செய்திகழும் வளச்சுன்னைக் குமாரசுவா
    மிப்புலவன் திருத்தாள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கோவை ச. கந்தையாப் பண்டிதர்

(1880 — 1958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## மூளாய்

# மூத்தவிநாயகர் திருவூஞ்சல்

### காப்பு

சீர்மேவும் யாழ்ப்பாண தேசந் தன்னில்
செய்யவதி ரன்புலோ மன்னி மேவும்
ஆர்ஏறும் சடைமுடியோன் புதல்வ ஞான
ஐங்கரன்தன் திருவடிக்கீழ் அன்பி னோடும்
பார்மேவும் ஊஞ்சலெனும் பதிகம் பாடப்
பக்தியுடன் எத்தொழிற்கும் முன்னே எண்ணும்
கார்மேவும் மூளாயிற் கோவில் கொண்ட
கணபதிதன் திருவடிகள் காப்ப தாமே.

### நூல்

ஏர்மேவும் பிரணவமே பீட மாக
இலங்கும்உப நிடதங்கள் பலகை யாக,
சீர்மேவும் நாதவிந்து தவிச தாகச்,
செய்யபரா சக்திஒளிர் விட்ட மாக,
நார்மேவும் அடியருளம் போல மைந்த
நலங்கிளரும் ஊஞ்சல்மீ தினிது மேவிப்,
பார்மேவும் புகழ்மூளாய்ப் பதியில் நாளும்
பயில்மூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (1)

இந்திரைகேள் வனும்சுதனும் வடந்தொட் டாட்ட,
இமையவர்கள் இருமருங்கும் கவரி வீச,
சந்திரசூ ரியர்தொழுது கவிகை தாங்க,
தகவுடனே மருத்தால வட்டம் வாங்க,
மந்திரமா மறைகீத வொலியோ டோங்க,
மன்னுபல வாச்சியங்கள் ஒலியின் வீங்க,
செந்திருவாழ் மூளாய்நற் பதியு கந்த
சீர்மூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசக்தி யவதாரம் என்னப் போற்றும்
ஔவையார் அருண்மறையின் பொருளைக் கேட்டுப்
பாதிமதி அணிந்தபிரான் அருளார் சோதிப்
பண்புமிகும் வீடடையச் செய்த செம்மல்
தீதிலதாம் மூளாய்நற் பதியின் மேவித்
திங்களணி செஞ்சடையிற் செறித்த ஞானச்
சோதிவடி வானபரன் மதலை யான
சுந்தரவி நாயகரே! ஆடீர் ஊஞ்சல். (3)

பண்டுநான் மன்றப்பொருளும் நால்வர்க் கோதும்
பரஞ்சுடரின் உருவான பதும நாறும்
அண்டர்வாழ் சரவணப்பூந் தடத்து மேவும்
ஆறுமுகம் உடைவள்ளல் தனக்கு மூத்தோய்!
வண்டுலாம் மலர்புனைவார்க் கருள் சுரந்து
வழிபடுவார்க் குணர்வுளுறும் துரிய மூர்த்தி
தொண்டர்வாழ் மூளாய்நற் பதியில் மேவும்
சுந்தரவி நாயகரே! ஆடீர் ஊஞ்சல். (4)

அருள்பொழியும் ஐங்கரமா மலர்கள் ஆட,
ஆனைமுகம் ஆட,ஒளிர் மகுடம் ஆட,
குருவிளங்கு தவளமருப் பொன்றும் ஆட,
குண்டலங்கள் இரண்டாடத் தண்டை ஆட,
தெருள்பொழியும் அடியருளத் துவகை ஆட,
தேவரோடு சிவகணங்கள் சித்தர் பாட,
திருவிளங்கு மூளாய்நற் பதியில் வாழும்
திருமூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (5)

செம்பொனணி மணிமகுடம் இருளைக் கீற,
தேவர்சொரி மலர்மாரி திசைகள் வீற,
வெம்புகடு வினையடியார்க் கொருங்கு பாற,
விளங்குசிவ ஞானஒளி உள்ளத் தூற,
நம்புமடி யவருள்ள நளினத் தேறி
ஞானநடம் புரிந்தருளும் நாத மூர்த்தி,
அம்புயமார் மூளாய்நற் பதியில் மேவும்
அருள்மூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளூறும் ஆக்கையளித் தடியார்க் கென்றும்
ஆனந்த சுகமளிக்குங் கருணை வள்ளல்
கள்ளூறு மலர்க்கொன்றை அணிந்தோய்! பண்டு
கயமுகனைக் காய்ந்தருளும் அமல மூர்த்தி
உள்ளூறு முயரருங்கற் பனைக்கு மெட்டா
ஓங்காரத் துள்ளொளிக்கும் ஒளியே யான
வள்ளூறு மொற்றைமருப் புடையாய்! மூளாய்
வரும்மூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (7)

சிரமுறுசெஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்,
சேரார்நெஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்,
அரவுறுபூங் கச்சினரே! ஆடீர் ஊஞ்சல்,
அமுதூறும் ஆக்கையளித் தடியார் தம்மைப்
பரமசுகம் அளித்தருள்வாய்! ஆடீர் ஊஞ்சல்,
பண்டைமறை தேடரியாய்! ஆடீர் ஊஞ்சல்,
வரமுறுசீர் மூளாய்நற் பதியில் மேவும்
வண்மைதிகழ் விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (8)

சீரார்ஐங் கரமுடைய தேவே! போற்றி.
சித்திமுத்தி தருமோன முதலே! போற்றி.
பாரார்வல் லபைமகிழும் மணாளா! போற்றி.
பரமசுகம் தந்தருளும் பரனே! போற்றி.
ஏராரும் எழில்மூளாய் நகரில் மேவி
இகபரநற் சுகமருளும் எந்தாய்! போற்றி.
கார்மேவு புகர்முகத்திர் ஆடீர் ஊஞ்சல்.
கவின்மூத்த விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். (9)

## வாழி

தெள்ளியநான் மறையுணரந் தணர்கள் வாழி,
தேவர்குலம் ஆனினங்கள் முகில்கள் வாழி,
தள்ளருஞ்சீர் மறைவாழி, சைவம் வாழி,
சால்புநிறை மன்னரொடு பின்னோர் வாழி,
உள்ளுதொறும் அன்பர்வினை ஒழிப்போய் வாழி,
உன்னதமார் கயிலைமலை உகந்தோய் வாழி,
விள்ளருஞ்சீர் மூளாய்நற் பதியும் வாழி,
வேண்டுமடி யார்க்கருளுங் கருணை வாழி. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவை
## ஸ்ரீ மணக்குள விநாயகர்
# ஒருபா வொருபது

உலகெலா மாக்கி யளித்துநின் றொடுக்கும்
ஆதியா மன்னை வடிவெனு மமல
நாதவொலி காட்டும் பாதபங் கயமும்
வாசிவச மான மாசினிலை காட்டும்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
சர்ப்போப வீத முப்புரி நூலும்,
அகில சராசர மடங்குபெரு வடிவாய்
அண்டமா றுலகு கொண்டபல் பொருளெலாம்
முன்னிலை யாக முறைநிறை தழீஇ
அருந்திடு நீர்மைசா லமலநெறி காட்டும்
மோதக மாதி திணித்தபெரு மோடும்,
பந்தமற்று நிலையாங் கந்தழி காட்டும்
பொன்மணிக் கலனும் பூந்தார்க் கொன்றையும்,
உடலுயி ரியக்க வொருப்பா டென்னும்
இருவினை யொப்பு மலபரி பாகமும்
சத்திநி பாதமுஞ் சாரரு ணிலையாம்,
பூவு நீருங் காலும் வானும்
ஓரோவொரு புறமா விராவி நிலைக்கும்
சதுரப் பாழெனுஞ் சதுரப் பாடு
நாற்கரங் காட்ட நான்றுபொன் னூசல்
ஆட்டயர் துதிக்கை யமலவக் கிரியாம்
சிவமெனுஞ் செழுஞ்சுடர் நவமுற வெழுந்து
கதிக்கும் வியாப்பிய வியாபக சந்தியாய்
உபய கலையு முணருநிலை காட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சக் கரமெனும் பஞ்சக் கரமும்,
பிணியெனுங் காலப் பிணிக்கும் பிணியும்
வாலிய தென்ன வயக்குகழு வாயும்
காட்டும் பாசமுந் தோட்டியும், அஞ்சலென்
றடியேற் கருளு மபய வரதமும்,
வித்தக முறலான் மேவுமத் துவித
ஏகநிலை காட்டு மேக தந்தமும்,
அமல வெறுக்கை யளியொடு பெருக்கி
அசையா தசையு மிருசெவிக் கவரியும்,
அகில மீன்ற வொருதனி முதல்வி
மவுன மந்திர மகர வடிவினள்
பிடியெனப் பகவன் களிறெனப் புணர
விந்து நாத வடிவென மிளிர்ந்தே
ஓவென வொலித்திட் டும்மென வூன்றும்
அருளொளி திகழும் பிரணவ வடிவொடு
சிவன் முத்திச் செவ்விநனி தெரிக்கும்
குருபர னிவனெனக் குலவுதிரு முகமும்,
முத்தீ விளக்கங் காட்டுமுக் கண்ணும்,
சிவநீர் பெருக்குஞ் செக்கரஞ் சடையாம்
பகுவாய்ப் பாந்தட் பணமுடி யென்னும்
பொன்னியன் மகுடஞ் சென்னியிற் பொலிய
மாலை மதியென வயங்குபொன் வண்ணமும்
திகழுந் தெய்வத் திருவுருக் கொண்டு,
அன்னையைப் பேணி யன்னவ ளருளால்
ஆக்கையுறா பொருளா மப்பனடி தொழுது
கல்வியுங் கேள்வியுங் கைவரப் பெறீஇ
மணங்கமழ் தெய்வத் திளநல மென்னும்
சிவமணந் திகழத் தவநெறி காட்டும்
கந்தழி நிலைஇய விந்து மதஞ்சால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலரும் பரிசு பெற்றமெய் யடியர்தம்
விமல யாக்கையாம் வேளூ ராங்கண்
மணக்குள மகிழ்ந்து வதிதரன் மானத்;
தத்துவப் பெரியராஞ் சித்தருள் தவாத
இந்து தேயமாந் தென்றமிழ்த் தேத்து
நம்பந்த நீக்குஞ் சம்பந்த முனிவன்
என்புபூம் பாவையா யெழுந்திடப் பணித்த
விம்மிதந் திகழும் வீறுசால் தொண்டை
வளநாட் டங்கண் மன்னிய வேத
புரியெனப் புகலும் புதுவையம் பதியில்
நம்பல மாக வம்பலத் தாடும்
ஐயனமர் வீதியி னொருசா ரவனென
மணக்குள வாழ்வு மகிழ்ந்தருள் வரதன்;
கவிகட் கெல்லாங் கவியெனுங் கடவுள்
அம்பிகை தனய னடியடைந் தோருக்
கெய்ப்பினில் வைப்பா மிறைவன்; முன்னோன்
விக்கின விநாயகன் வினையுரு வாகிய
என்னுளம் புகுவதோ ரிறும்பூ துடைத்தே. (1)

உடைமணி யோசை யுலகெலாங் கேட்பநின்
அநுசனு யமரு மள்ளிலை நெடுவேல்
வள்ளிமண வாளன் புள்ளிமயி லேறி
ஒருமூ வுலகும் வலம்வரு முன்னர்
அகில வுலகமு மடங்கிய நினது
பெருவயிறு தூக்கிக் குறுக நடந்து
சராசர வடிவாந் தந்தையை வளாவி
மாங்கனி பெற்று விழுங்கித் தீஞ்சுவை
கண்டருள் கற்பனை கொண்டிடு தத்துவம்
ஈங்கெனக் கியம்புதல் வேண்டு மோங்கிய
விண்ணத் துயரிய தண்ணிலாத் தவழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூம்பொழி னடுவட் பூழைவழி நுழைஇக்
குறிவழிச் சென்ற சிறுகண் மந்தி
மாங்கனி யுண்டு வதிதர லம்ம
குரவன் குறிப்பின் வழுவா தொழுகிப்
புகலிடம் புக்கபின் பொன்னடித் தொண்டர்
மாவெனப் பூத்த காயப் பெண்ணும்
தேமாங் கனியுண்டு சிவானந்த விளைவெனும்
பேரின்பந் துய்க்கும் பெற்றி காட்டும்
வளந்திகழ் புதுவை மாநகர்
மணக்குளம் வதியும் வானவ ரேறே. (2)

ஏற்றுயர் கொடியுடை யிறைவனும் வீற்றுப்
பாற்கடற் றுயிலும் பரமனு மொன்றெனும்
உண்மை காண்ட லொண்ணுமோ! அதுதான்
படிப்புவல் லபத்திற் படுவதோ! அன்றே!
தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
குரவனரு ளின்றிக் கூடுவ தாமோ!
புராணக் கற்பனைப் பொருளு ணரா(து)
ஏற்றத் தாழ்வுரைத் தேளனஞ் செய்து
குறைபல பேசிக் குதுகுதுப் புறீஇக்
கசட்டு மனத்தாற் கலாம்பல விளைத்துக்
கும்பிக்கா ளாயினர் குறையா மாக்கள்
நந்திவடி வாகி வந்தெனை யாளச்
சித்தர்வாழ் புதுவையாந் திருப்பெருந் துறையில்
மணக்குளம் வதியும் வரத விநாயக!
உற்ற வாக்கையி னுறுபொரு ளாகிச்
சசிவண்ண னாகிச் சதுர்ப்புஜந் தாங்கிச்
சுக்கிலாம் பரத்திற் றுலங்கிடு நீயே!
விண்டு வென்ன விளம்பிடும் வேதம்,
இடமும் பொருளு முடலு முயிரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியுஞ் சிவமுமாந் தத்துவ மரீஇய
விண்டுவுஞ் சிவமும் வேறெனப் படுமோ!
நாரா யணனுன் முகனைப் படைத்தனன்
பிரமன் படைத்தனன் சிவனை யென்னும்
அருமறை யறியா விருகாற் பசுக்கள்
போலிக் கல்வியாற் பொய்ப்பொருள் கண்டு
மாழ்கலுற் றுலகை மயங்கவைத் தனரே!
கரியமா லுந்திக் கமல மென்னும்
பரமா காச பங்கஜ தளத்தில்
புறப்பட்டுப் புக்கு வியாபி யாகி
உலகெலா மாக்கு முபய பூதமாய்
உடலுயி ராகி நடலையொ டாடிய
பிரமதத் துவமே யுரியசா தகத்தால்
வியாபகங் குறுகி வியாப்பியத் தொன்றி
அமலசிவ வடிவா யமைதரு மிதுவே
முத்திநெறி யான தத்துவ மெனநீ
உணர்த்த வுணர்ந்தன னுண்மை யானே*. (3)

யானே யெனக்கிக லுறவெனத் தெளிந்து
சிதையா வூக்கமொடு செந்நெறிச் செலீஇ
உலகிய லொடி யொப்புர வொழுகி
முன்னிலை யாவையுந் தன்னிலை யாக்காது,
நில்லாப் பொருளை நிலையென நினைஇ
அழுக்குநெறிச் செல்லு மசட்டுப் போலி
முன்னிலைக் கோரணி முன்னிநின் றுடற்ற
அலமந் துள்ள மயர்த்தனன் மன்னே!
மடிமடிக் கொண்டு மாழாந்து நின்று
பணிசெய்து கிடவாது பராக்குறீஇ நாளும்

(*உண்மை ஆன் - உண்மை ஆக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளச் சென்று நினைவிழந் தனனே,
உணவே யுணர்வெனு முண்மையை யுணர்ந்தும்
கணமேயு மதனைக் கடைப்பிடித் திலனே,
அவாவினை அருளுறு நாட்டந் தவாது
தவரத் துறந்து நிறைமுறை தழீஇத்
துப்புர வமையா துப்பொடு காடியாம்
விந்து நாத விளைவா னியலும்
தூலச் சிவைக்குக் கேடுசூழ்ந் தனனே;
ஐம்பூ வென்னு மைந்தாந் திணையாம்
என்பினுண் மறையா மன்பெனு மப்பினைத்
துப்பெனுங் களிம்பு நீக்கி யொப்புற
அமுத மாக்கி யருவா யுள்ளாய்!
ஆக்கையுறு பொருளா மருளினை யாக்காது
திடனிலா யாக்கை யுடனுறீஇ நாளும்
துன்புறாஉ நிலைமையிற் றுவக்குண் டனனே.
குருநெறி நாடாது தெருமர லுழந்து
பத்திமை யின்றிப் பாவமே தடித்துக்
குரோத மதமாதி குணங்களுக் கிடமாம்
தன்னிலை யாகிய வென்னிலை யிதுவெனின்,
அருளுரு வடிவா யமைந்துமுன் னிலையில்
நந்திவடி வாகிநீ வந்திட லெவனோ!
தவறுபெரி துடைத்தென் சால்பிலா வொழுக்கம்
அன்பிலன் கொடிய னளியில னெனினும்,
செய்ந்நன்றி யறியாத் தீனனே யெனினும்,
மக்களொடு மனையே யொக்கலென் றினைய
அசட்டுமுன் னிலைகளா னலந்தலை யுறீஇ
அறிவறை போகிய நிறையிலா வுளத்தால்
உடல்பொரு ளாவியை யுன்னடி யிணைக்கே
அர்ப்பணஞ் செய்யா வாதனே யெனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகத் தெளிவு மேதகக் காணுமுன்
சோதனை பிழைத்த துரிசுளே னெனினும்
புறமெனைப் போக்கா தருணமதி! யெந்தாய்!
பணிசெய்து கிடக்கும் பண்பெனக் கருளித்
தொண்டரிற் கூட்டித் துயர்களைந் தருண்மதி!
பொறிவாழ் பூவொடு சிறுவெள் ளாம்பலும்
மருங்கே யொருங்கி மலர்ந்து மணக்கும்
வாவிதிகழ் புதுவை மணக்குளப் பதியிற்
குருபா ணுகிக் குலவு முன்னவனே! (4)

முன்னிலை யுலகியன் மொழிக்கிடப் படுமோ!
உண்மையொடு போலிக் கொப்புமை யெவனே!
அருளொடு மருணிலை யனையநீர் மையதாம்!
இடையீட்டின் பெற்றி யியம்பிடத் தகுமோ?
பொய்யதே மெய்யா மெய்யதே பொய்யாக்
கற்பனைப் போலியே தத்துவ மாயது
செத்துப் போதலே முத்தி யென்னும்
அசத்திய நெறியே சத்திய நெறியாம்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாயது!
பொய்கண் டுரைத்த பூரி யோரே
மெய்கண் டருளிய வித்தக ராயினர்!
அதனால்,
உண்மையுரைப் போரைக் கண்மை யின்றி
ஏளனஞ் செய்யு மியலதே யுலகம்
விடமே யுருவா மிடமன்றே வுலகு
அழுக்கினை யழுக்கா லகற்றுதல் போல
அருந்தல் பொருந்த லனந்த லமைதந்
தாலத்தை யமுத மாக்கு மவரே
காலனைக் காலா லுதைக்குங் கடவுளர்
விதியினை வெல்லும் வித்தக ரம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியினை வெல்லாது மெய்பொய் யாக
இறந்தோர் முத்தி யெய்துவ தெவனோ!
விதியினை வெல்லுதல் மெய்யின் வடிவென
ஊனமி லருவ வொளிமய முறாஉம்
தத்துவர்க் கன்றிச் சாலா தெனவும்
"சத்தமோ டொன்றி மனமு மிறந்தபின்
முற்று மழியா துடம்பு" தா னெனவும்
ஐய! நின் னருள்பெறு மவ்வையா ரருளிய
மறைமொழி தன்னையு மாக்கள்தேர்ந் திலரே!
தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
கல்லா மாக்கட் கொல்லுவ தாமோ!
போலிவித் துவத்தாற் புலப்பட ஆமோ!
கல்வி யெனினே காவிய சாத்திர
இலக்கணப் பெயரா னியன்றபன் னூல்களைப்
படித்தலே யென்பர் பாருளோர் யாவரும்
கண்ணான் ஞானங் கருதுநெறி காணார்
கண்ணுடை யவரே கற்றவ ரென்னும்
செந்நாப் புலவன் றிருமறை யோரார்!
வேடம் பூசை யாதிய நடைநொடி
சாடையும் போலி நிட்டையும் பிறவுமே
முத்தி நெறியென மொழிகுவர்; உவையும்,
பிராணனோ டபானனைப் பேசிட நின்ற
கொடிநிலை வள்ளி வடுநீங்கிச் சமமுறக்
கந்தழி காட்டுங் கந்தருவ மென்னும்
இயற்கைநன் னெறியா மில்லறந் தழுவாது
பெற்றசிற் றின்பமே பேரின்ப மாகும்
பிரம சரியப் பெற்றியு மறியாது
இந்திரிய நிரோத வியல்பு மறியாது
இந்துமத வுண்மை யிலேசமு மறியாது
செயற்கை நெறியான் மயக்கநனி யுறீஇத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துற்றவை துறந்து வற்றி நாளும்
உடலுயிரை வாட்டி யுணர்ச்சி மழுக்குற்று
வாயொடு கண்மூடி வதியு நிலையாம்
அசத்திய நெறியுமே யுடலசைத் தாகிச்
செத்துப் போனபின் முத்திதரு மென்பர்!
அள்ளூ றாக்கையி னருமை யறியாது
விமல யாக்கை மேவுமண் ணுவில்
அமுத மூறு முண்மையு மறியாது
புவியுட் புதைந்து நாறும் பிணங்களும்
அள்ளூ றமுத வாக்கையென் றரற்றுவர்!
சத்துவந் திகழ்சிவ தத்துவ மாகிக்
கடையா யுள்ளாய்க் கடவுளென நிலைஇய
ஆக்கை யுறுபொரு ளாகிய விந்தெனும
சத்துப் போகச் சவநெறி கண்டபின்
அமுத வடிவா மமல னகன்றபின்
புரிசடை யீசன் புறப்பட்டுப் போனபின்
அள்ளூ றாக்கைபெற் றமுத முண்டு
சிவத்துவந் திகழ்ந்து சிவாங்க மாதலாம்
முத்திநிலை யென்பது முயற்கொம்பே யன்றே!
சச்சிதா னந்த தத்துவ நிலையும்
சத்துஞ் சித்துமாய்ச் சமைந்த வுடலுயிர்
இயக்கவொப் புமையா னியலுந் தீயாய்
விமல யாக்கையில் விளைவுற் றெழூஉம்
அமல வருளொளி யாகுமுத் தீயாம்
அகண்டா கார வருட்பெருஞ் சோதியின்
அருமை பெருமையு மகில மாக்கள்
அறியவல் லுநரோ! அறியவல் லுநரோ!
இருவினை யொப்பும் மலபரி பாகமும்
சத்திநி பாதப் பெற்றியு மறியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருளுடம் பினரே மன்னிய சீவன்
முத்த ரென்னு மூடக் கொள்கையால்
முத்திநெறி யறியாது செத்துப் போன
குருட்டுமாக் களையே குரவரெனத் துணிந்து
சிவாப ராதமாந் தீமையு முணராது
தத்துவப் பெரியரோ டொப்ப மதித்துப்
பூசையும் விழாவும் புரிகுநர் பலரே!
தத்துவப் பெரியார் தம்புகழ் நிலைஇய
தமிழக மாந்தர்க்குச் சாலுமோ விவையே!
அடியவ ரியலு மன்னவர் பெருமையும்
செடிசே ருடலைச் செலநீக்கி யமல
வடிவப் பேற்றிலவ் வடியவ ரடைந்த
அளப்பிலாத் துன்பமு மப்பேற் றருமையும்
ஊனங்க ளெட்டு மறவே யொழிந்த
ஈனமில் காயமாம் ஒவடி வதுவே
சிவன் முத்தர் திருவுரு வெனவும்
தெரிசனத் தன்றிப் பரிசனத் தமையா
அதுவே யருவுருத் திருமேனி யெனவும்
அன்ன வமல வடிவே யருளாய்ப்
பல்லோருங் கண்டு போற்றப் பரமாம்
ஞான காசத்து நண்ணி யொடுங்கும்
சத்திய நிலையே முத்திநிலை யெனவும்
வேதாக மாதிகள் விளம்புவது மறியா(து)
அநாதி யாகவிவ் வவனியிற் றோன்றிய
எண்ணிலா முனிவரு மிருடி கணங்களும்
அகத்தியர் போக ராதியாம் பலப்பல
சித்தர் குழாங்களுஞ் சிவவாக் கியரும்
அல்லமப் பிரபுவு மிரேணுக ராதி
பஞ்சவா சிரியரு மற்றையோர் பலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல்திரு மூலனு மவ்வைப் பிராட்டியும்
மூவடி முப்பதா முதுமறை யருளிய
இடைக்காட்டுச் சித்தருமெண்ணில்பல்லடியரும்
அண்ணல்வச வண்ண ராகியோர் பிறரும்
மாணிக்க மணியா(ம்) நங்கண் மணியும்
சம்பந்த ரப்பர் சுந்தரர் மூவரும்
கண்ணப்பர் நந்தனார் சேரமா னாதி
வித்தகந் திகழுமெய் யடியவர் பலரும்
ஆண்டா ளம்மைநம் மாழ்வா ராதிய
ஆழ்வார் திருநாமக் கரும்பே ரிலக்கிய
மாகி மிளிரு மருந்தவப் பெரியரும்
பட்டினத் தடிகள் பத்திர கிரியார்
சேந்தனார் முத்துத் தாண்டவ னாரும்
உலகர் போல்வாழ்ந் தொப்புர வொழுகி
இன்ப வாழ்வி னன்புநெறி தழீஇ
உடலு முயிரு மொழிவற வொன்றிப்
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு மகன்றே
அகிலங் காண வருளாய் வெளியாய்
முத்திநிலை பெற்ற தத்துவ முணரா(து)
அருண்மலிசொல்லி னுமரும்பெருஞ்செயலினும்
அன்னவர் நாட்டிய வுண்மையு முணராது
செத்துப் போதலே முத்தியெனப் பிதற்றித்
தடுமாற்ற மடைந்து சைவ மறியா(து)
இந்து தேசமாஞ் செந்தமிழ்த் திருநாடு
தவிக்குமிந் நாளிற் றண்ணருள் கொண்டே
உ திருஷ்டிய மான வருமறைப் பொருளெலாம்
தமியேற் குணர்த்தியித் தரணியோ ருய்வான்
“**வித்தகம்**” என்னுமிவ் வுத்தம போத
பத்திர வாயிலாய் வெளியிடப் பணித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதை நடாத்தி யரும்பெரு முத்தி
வித்தினைந் தமிழக மேவிட வூன்றிப்
புண்ணியம் புகழொடு நண்ணி மேலுறும்
பணிகட்கு மடியனை யருகனாப் பயிற்றித்
திருவுளம் பற்றிய கருணைக் கம்ம!
கடையேன் றரத்தகோ கைம்மா றதுவே!
வேதவொலி நாளு மோவா தொலிப்ப
ஞான சத்தியா(ம்) நந்தியெம் பெருமான்
வரமலி கயிலை வதிதரன் மானச்
செந்தமிழ் வளஞ்சால் திருப்பெருந் துறையாம்
வேத புரியெனும் போதமார் புதுவை
அம்பலத் தாடு மையன் வீதியில்
நந்தி மன்றத் தருகே நண்ணிய
தெய்வ மணக்குளத் திருத்தளி தன்னில்
அவனே யாகி யமரும்
சிவசுத னாகிய தேசிக மணியே. (5)

மணிமன்று ளாடும் வரதனருள் வடிவாம்
தேசிக நினது தெரிசனம் பெறுதல்
மாசுறு முலக மாக்களுக் கெளிதோ
புண்ணிய கன்மம் புரிந்திடல் வேண்டும்
அன்னது மெளிதி னமைகுவ தெனினே
எண்ணில்பல் கோடி சென்மத் தீட்டிய
நற்றவப் பயனு முற்றிடல் வேண்டும்
பிறப்பிறப் பென்னும் பீழைக் கஞ்சி
அருட்டா கங்கொண் டலந்தலை யுறீஇ
முத்தி வேட்கை முற்றிடல் வேண்டும்
சாதன சதுட்டய சம்பன்ன ராகித்
தீவினை நிறையுஞ் சிறுகுதல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரைக் காணினு மிவர்கொலோ வெம்மை
ஆள வந்த நாத ரென்னும்
ஆராக் காத லகமதரல் வேண்டும்
கர்ம பேதஞ் சடபேதங் கண்டு
சீவர் தோறும் வேறுவே றாக
ஆட்பா லவர்க்குநீ யருளுஞ் சாதக
வேதகட் டங்களை மெய்ம்மையிற் றாங்கி
ஒழுகுவ தென்றா லரிதினு மரிதே!
இன்னன பண்பெலா மன்னும் பக்குவம்
என்னனை யாருக் கியைகுவ தாமோ
அரிதே யெனினுமுன் புரியுநற் றவத்தால்
புகலிட மாகிய புதுவைநகர் புக்கு
முடமார் கழிமுடை முண்டத் தலைகொடுன்
சினகரந் தொழுது திருவடி யிணையைப்
போற்றும் பேறு வாய்த்திடு மெனக்கு
நந்திவடி வாயென் சிந்தையு ணின்று
வேத வுண்மையாம் வியனெடுஞ் சாகரத்
திவலை யாவது தெரித்தனை யாதலின்
பாசத்தா ழுருவிப் பற்றெலா மறுத்தெனைத்
திருத்தியுன் கோயிற் கடைபுகச் செய்தல்
அத்தநின் கடனென வமைந்தனன் மன்னே!
வேதசூத் திரங்களும் போதமார் குறளும்
அருளுமூ தாட்டியா மவ்வையை யருளார்
துதிக்கையா லெடுத்துத் தூநெறிச் செலுத்தி
மீண்டு வாரா மெய்ந்நிலை யருளி
ஆதி சத்தியி னவதார மென்னப்
போற்றிட வைத்த புராண காரண
புணரி முழக்குறுப் புதுவையாம் பெருந்துறை
மணக்குளப் பதிவா ழறப்பெருங் கடலே! (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பொரு ளின்பம் வீடென் றிவற்றின்
திறன்றெரிந் துணராச் செகத்தோ ரெல்லாம்
மறம்பொரு டுன்ப மரணமென் பனவே
அறம்பொரு ளின்பம் வீடென வமைந்து
மறத்தாற் பொருளீட்டி வருந்திமாள் குவரே.
அறமே யிடமு முதலு மாகும்
அதுவே வீடென் றறைந்திடும் வேதம்.
"இடம்பட வீடெடேல்" என்றன ளவ்வை
அமல வுடலே யருள்வடி வாகும்
அருளே யன்றிவீ டாகுவ தெதுவோ!
உடலழிந் தால்வீ டடைகுவ தெவனே!
பொருளே பொருளா மதுவே பொன்னும்
பொன்மயன் சிவனெனப் புகன்றிடும் வேதம்
உடலேபொன் னெனவு முரைத்திடப் படுமே
செம்பொன்செய் சுண்ண மிடித்தல் வேண்டும்
வம்புபழுத் துடல மாளுதல் தகாதென
மணிவாய் மலர்ந்தவன் மாணிக்க மன்றோ!
அறமும் பொருளு மொன்றுற வமைந்து
வீடுபேற் றின்பம் விளையு மென்ப
சிற்றின்பத் திரிவே பேரின்ப மாகும்
இனத்தை யினத்தா லீர்த்திட வேண்டும்
"பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி"யென்
றருளின னன்றோ அண்ணல் திருமூலன்!
இடமழி வுற்றாற் பொருளு மழிவுறும்
இன்பமும் வீடு மிலவா மன்றோ!
உலகிய லுக்கு முண்மை நிலைக்கும்
நெறிதா னென்றே நிறைபேத மன்றோ!
வேறுபா டென்ன விளம்பிடும் வேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவது மழிவது மொன்றினு லென்பது
தேவராஞ் சித்தர் திருவாக் கன்றோ!
சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்தே
ஆசைப் பேற்றை யடிப்படை யாக்கிக்
கஞ்சியில் வதிந்து காலாட்டி யுண்ணும்
சித்தரா மடியரே நித்திய மான
பேரின்பங் கண்டு பிணிமூப் பிகந்து
சாதலுறா வாய்மைச் சாத லடைந்து
முத்திநிலை பெறாஉந் தத்துவப் பெரியராம்
இந்நிலை கைவர லெளிதோ வன்றே!
அரிது அரிது மாஅரி தம்ம!
ஆசா னருளா னருந்தல் பொருந்தலாம்
கற்ற லென்னும் பயில்வுகைக் கொண்டு
முன்னிலை யாவுந் தன்னிலை யாகி
விக்கின மனைத்தும் மக்கின மாகித்
துன்பம் யாவு மின்பமாய்த் திகழும்
குற்ற மனைத்துங் குணமெனத் திரியும்
விக்கின விநாயக விழுப்பேறு வேண்டும்.
அன்ன விழுப்பே றருளுங் குருபரன்
நந்திவடி வாகி வந்தெனை யாளப்
புதுவை மணக்குளப் பூங்கோயில் வாழும்
கற்பக விநாயக! சொற்பொருள் வடிவாய்
அம்பலத் தாடு மையனருண் மகவாம்
வரதனீ யன்றி மற்றையோர் எவரே. (7)

எவரே யெனினுமுன் னிணையடி தொழாதார்
முன்னிய கரும முடிக்கவல் லுநரோ?
அரியயன் முதலோர்க்கு மாகா தன்றே
அரியயற் கரிய வமலநா யகனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மல காரிய முப்புர மூதூர்
அமலவக் கினிக்கிரை யாக்கிய ஞான்று
விமலநின் றுணையே வேண்டின னென்றால்
விக்கின விநாயக விழுப்பே றதுவாம்
நின்பதம் பெறுநா நீணிலத் தெவரே
சித்தியு முத்தியுஞ் சேர்குந ரம்மா!
அமலமுதற் படியாய் நிலவு மிதுவே
முத்தி வாயிலென முழங்கிடும் வேதம்
மலபரி பாக மன்னு கந்தழியும்
ஆறெனு மறிவு பூரணம் பெறீஇய
மானிட ரென்னு மக்களாம் பேறும்,
வாசி வசமான வாசிட்டப் பேறும்,
விசுவமித் திரமாம் விழுமிய பேறும்,
வேண்டியன யாவும் வேண்டியாங் கெய்தும்
கற்பகந் திகழுங் கற்பகப் பேறும்,
ஐந்துந் திரப்படு மைந்திரப் பேறும்,
குபேரசம் பத்தெனுங் குறைவிலாப் பேறும்,
மாபோகி யாகி மன்னிடும் பேறும்,
துன்பெலா மொருவுபே ரின்பப் பேறும்,
இதுவே யென்னி னிதன்றிற மியாரே
கிளக்குந ரம்ம! நினைத்தபல் போகம்
புணராத் துறவு போலியே யன்றே!
ஆக்கையு ளசுத்த நிறையென வமைந்த
மாயையைத் துரத்தலே வாய்மைத் துறவாம்
காய மாயங் கழிதலு மிதுவே
கதவந் திறந்து மறைக்காடு கண்டே
அமலமா ரறநிலை யமைதர வேண்டும்.
இந்நிலை யெளிதின் மன்னிட வெனக்குன்
திருவருள் வழங்க வேண்டும்! கரவாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய நல்கு மாண்டகு சிந்தா
மணியெனத் தேவர் வழுத்திடும் விமல
வல்லி யென்னும் வல்லபை மணாள!
புத்தி சித்தியாம் பூவையர் கணவ!
செத்துப் போதலே முத்தியெனத் துணிந்த
உலக மாக்களுக் குண்மைச் சைவ
முத்திநிலை காட்டு மூலபண் டாரப்
புத்தமுது வழங்கும் புதுவை மணக்குள
வித்தக விநாயக விமலனைக் காணே.
காமுறு தீயைக் காதலோர்க் களிக்கும்
திரமுறு தீக்கையாற் றிரிமல மறுத்துப் (8)

புன்புலா லுடலைப் பூங்குட லாக்கி
அருளுறு வடிவோ டருவாய்ப் பரத்தில்
கற்பூர தீபம் போலக் கலக்கும்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாகிய
முத்திநெறி காட்டும் வித்தக நந்தியெங்
குருபர னருண்மலி புதுவையி லவனென
மணக்குளம் வதிந்தருள் வான நாயக!
மூலா தாரத்து முளைத்தெழு சோதியாய்,
ஐம்புல வேட ரரும்பெறல் வெறுக்கையாம்
வள்ளியை வெருட்டி வடியிலை நெடுவேல்
முருகற்கு வழங்கிய முன்னவ! அன்பிலா
என்னி னெனக்கினிய வின்னருண் மூர்த்தி!
வினையேன் விண்ணப்பமொன் றுரிமையோடு கேண்மதி!
முன்னையூழ் வலியா லின்னல் பலவுழந்
தேது மறியா வேழைமை வாய்ந்து
கணமுந் தணிவின்றிக் கலங்குறு மனத்தால்
பிணிபல நலியப் பிறிதொன் றுநாடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மறியாது தவிக்குநிலைக் கிரங்கி
"வித்தகப்" பெயரிய பத்திர மதனால்
பழமைதிகழ் தமிழகக் கழனிபண் படுத்துச்
சத்திய நெறியாஞ் சைவநன் னெறியும்
முத்தி நிலையும் வித்திடப் பணித்துத்
தோன்றாத் துணையாய்த் தொடர்ந்து பின்னும்
உண்மைபல தெரித்திச் செம்மைவினைப்பணியை
மூவாண்டு முற்றுற வருளினை யாதலின்
குருபர! நினையே திசைநோக்கித் தொழுதுன்
பூங்கழல் சென்னியிற் கொண்டு போற்றுவன்.
மேலும்பல் லாண்டிவ் "வித்தக" விழுப்பணி
நன்ன ராற்றிட வின்னருள் வழங்கித்
தமிழக மொன்றோ தாரணி முழுவதும்
பொய்திக ழசத்தியப் புலைநெறி நீங்கி
மெய்திகழ் சத்திய வியனெறி கண்டே
உய்ந்திடத் தெய்வ நந்திவடி வாகிப்
புண்ணியர் போற்றிட நண்ணித் தெய்விக
சதுர்வித வுபாயத்தாற் சைவநிலை நாட்டிப்
பொல்லாக் கும்பி புகுதரா தடியேன்
மருணிலை யகற்றி யருணிலை யதனில்
என்னையு மிருப்பவ னாக்கியுன்
அருளா ரமுத மருத்திடு கெனவே. (9)

எனதுயிர்த் துணையா மிறைவா! போற்றி,
மனமொழி மெய்களில் வாராய்! போற்றி,
துதிசெயு மடியரைத் துதிக்கையா லெடுத்து
விதியினை வெலச்செயும் விகிர்தா! போற்றி,
குருவடி வான குழகா! போற்றி,
மருள்வடி வகற்று மணியே! போற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலமெய் யடியார் விளைவே! போற்றி,
அமல ஐகார வடிவோய்! போற்றி,
தேவர்க்கு மரிய சிவமே! போற்றி,
மூவரும் போற்று முதல்வா! போற்றி,
வல்லபை மகிழு மணாள! போற்றி,
சொல்வடி வான சுடரே! போற்றி,
சித்தி புத்தி தலைவா! போற்றி,
முத்திநெறி காட்டும் வித்தக! போற்றி,
விக்கின மொழிக்கும் விமலா! போற்றி,
நக்கன் மதலையா(ம்) நம்பா! போற்றி,
தமிழ னாகிய சைவா! போற்றி,
ஆரிய னாகிய அந்தண! போற்றி,
மூலா தார முதற்பொரு ளாகிக்
காலனை யுதைக்குங் கால! போற்றி,
மெய்யடி யார்கள் வேண்டிய விளைக்கும்
கற்பக மான வற்புத! போற்றி,
இந்திரற் கருளு மிறைவா! போற்றி,
சந்திர சடாதர சங்கர! போற்றி,
மாசு நீங்கிய மனநிலை காட்டும்
மூஷிக வாகன முதல்வா! போற்றி,
கயமுகற் செற்ற கயமுக! போற்றி,
நயமிலா நாயேற் கருளினை! போற்றி,
சீயேது மின்றியென் செய்பணி கொண்ட
தாயினு மினிய தயாபர! போற்றி,
அன்னாய்! போற்றி, யத்தா! போற்றி,
பொன்னார் மேனிப் புனிதா! போற்றி,
அவ்வையா மன்னைக் கருளினை! போற்றி,
அன்னவ ளருளு மருமறை யோடென்
புன்சொலும் கொண்ட புண்ணிய! போற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியருண் மலிந்த ஞான பூமியாம்
புதுவைநகர் புரக்கு மரசே! போற்றி,
மணக்குளப் பதிவாழ் வரதா! போற்றி,
கணபதி! போற்றி, கணேச! போற்றி,
தற்பர! போற்றி, சாந்த! போற்றி,
போற்றி! போற்றி! சயசய! போற்றியென,
வார்த்தை மாத்திரமா வழுத்தறி னலதனை
ஏத்திட வல்லுந ரியாவரிவ் வுலகே. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை

# ஸ்ரீ மணக்குள விநாயகர் பதிகம்

## 1935

தரவு கொச்சகம்

உலகமெலாம் படைத்தளித்தே ஒடுக்குநிலைக் களமாகி
இலகுபிர ணவவடிவாம் எழிலானை முகத்தவனே!
அலகிலருட் சித்தியெலாம் அளித்தருளும் ஐங்கரனே!
மலமகற்றும் புதுவைநகர் மணக்குளத்து விநாயகனே! (1)

உடலுயிர்க ளமலமடைந் தோவடிவின் மன்னுதலே
திடமுறுநற் சிவமுத்தித் திறமென்னத் தெரிப்பதுபோல்
கடனெழுகுங் கழிற்றுமுகங் காட்டியருள் குருமணியே!
மடமகற்றும் புதுவைநகர் மணக்குளத்து விநாயகனே! (2)

விதிக்குயவன் வனைந்துவிடும் விடக்குடம்பிற் பொய்வாழ்வை
மதிக்கமன மொருப்படா மாண்புடைமெய் யடியர்தமை
துதிக்கையா லெடுத்தருளாந் தூநெறியிற் செலவிடுப்பாய்
மதிக்கலைவாழ் சென்னியனே! மணக்குளத்து விநாயகனே!

துரியநிறை சுடரே! யுன் துணையடிகள் தொழுதடைந்தேம்
மருமலர்போல் விமலசிவ மணங்கமழும் அடியருடற்
புருவநடு வெனுங்குளத்துப் பொருந்துசெயல் காட்டுதல்போல்
விரைமலர்ப்பூம் பொழிற்புதுவை மணக்குளத்து விநாயகனே!

விக்கினங்க ளகற்றியருள் விறலிக்கு மாண்பினால்
விக்கினவி நாயகனென் றுனைப்போற்றும் வேதமெலாம்
நக்கனருள் திருமதலாய்! நின்னடியை நண்ணியஎம்
விக்கினங்கள் ஒளித்தருளாய் மணக்குளத்து விநாயகனே! (5)

சித்தியெலாம் அருளுதலாற் சித்திவிநா யகனென்றே
இத்தலத்தோர் குதூகலத்தோ டியம்புமொழி பழுதாமோ?
எத்தொழிற்கும் இறைவா! வுன் இணையடிக்கே சரண்புகுந்தோம்
சித்தர்தொழும் புதுவைநகர் மணக்குளம்வாழ் தேசிகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலத் திருவனைய மாரிமுத்தாம் சேயிழையாள்
அங்கணனார் திரோதானத் திருவடியி லமர்ந்தொடுங்கும்
துங்கமிகு மூவாண்டு நிறைவுவிழாத் துரிசகன்றே
இங்கியல அருள்புரியாய்! மணக்குளம்வாழ் இறையவனே!

வாழைமுதன் முக்கனியு மோதகமும் மகிழ்ந்துண்ணும்
பேழைவயிற் றோய்! அவ்வைப் பெருமாட்டிக் கருள்குரவா?
மாழையொண்கண் மாரிமுத்தாம் பூம்பாவை புத்துயிரின்
வாழ்வுபெற அருள்புரியாய்! மணக்குளத்து விநாயகனே!

அவநெறிக்கே யாளாகா தடியரேம் அருணெறியாம்
சிவநெறியே கண்டிடவுன் திருவருளை வேண்டுதுமால்
தவநெறியோர் பெறும்பரம தத்துவமாம் **தனிப்பொருளே!**
பவநெறிதீர்த் தருள்புதுவை மணக்குளம்வாழ் **பண்ணவனே!**

பொய்திகழும் புரைநெறிகள் போயகல நித்தியமாம்
மெய்திகழும் சிவநெறியே மேதினியில் நனிவிளங்கத்
தெய்வநந்தி வடிவாகி வந்தருளாய்! சிற்பரனே!
வையநிகழ் புதுமைதிகழ் மணக்குளத்து விநாயகனே! (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைக்கரம்பொன்

# முருகவேள்

# துவாதச தோத்திர மஞ்சரி

## அறுசீராசிரிய விருத்தம்

எம்மண்ணல் திருமூலர் சிவபூமி
யெனப்புகலு மீழ நாட்டிற்
செம்மைநல முடையவிரே ணுகரென்னுஞ்
சிவாத்துவிதச் செல்வர் முன்னாள்
அம்மையப்பர் அருவுருவாஞ் சிவலிங்கம்
பலகோடி யமைத்தா ரென்றால்
அம்மம்ம! விந்நாட்டி னருமைபெரு
மையையாரே யறைகிற் பாரே! 1

தேவார மோடுதிருப் புகழ்பெற்ற
விந்நாட்டிற் செவ்வேள் வைகு
மாவாருந் தலங்களே மலிந்துளவங்
கவற்றுளொன்றாய் மன்னி நாளுங்
கூவாழி நடுவணுறுங் கரம்பொன்னென்
றுரைசான்ற கோயின் மாண்பு
நாவாரச் சிலபுகல்வ னல்லோர்கள்
குணநாடி நயப்பா ரென்றே! 2

ஏழ்பனைநாட் டொருபாக மாகிமிளிர்
யாழ்ப்பாணத் தொருசார் மேவி
ஆழ்கடலி னடுவணையா யமலமுதற்
படிபோல வமைந்து நாளும்
பாழ்படுமிப் பிறவிநெறி பாற்றியடி
யருக்கருளும் பண்பு வாய்ந்த
வாழியமே லைக்கரம்பொன் தெய்வீக
மாண்புநம்மால் வகுக்கற் பாற்றோ! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமுறுபொன் னளிப்பதுபோற் குருநாதன்
கைவிரல்போற் கவினும் பஞ்சாக்
கரமுறுபொற் குளிகையளித் தடியவர்தம்
முடலுயிரைக் கனக மாக்கும்
திரமுறுநற் றீக்கையினை லருட்சோதி
வடிவாகித் திகழச் செய்யும்
பரமகுரு வாமுருகன் பொற்கரமாங்
கரம்பொன்னிலை பகரற் பாற்றே ! 4

வேலதுவே யாறுமுகன் வடிவமென
வீரவா கருளு மாற்றால்
வேலதுவே ஞானசத்தி வடிவமென
மெய்ந்நூல்கள் விரிக்கு மாற்றால்
வேலதுவே வினையொழிக்கு மெனவருண
கிரிநாதன் விளம்பு மாற்றால்
வேலனையின் பாங்கருறு கரம்பொன்னே
வேலிறைவன் தலமா யிற்றே. 5

வேலனையுஞ் சரவணமாஞ் சரவணையும்
வேலினெடு மயிலைக் காட்டக்
காலமெனுங் காலனையுங் காலென்னுங்
காலினுற் கடக்கச் செய்யும்
நீலமயி லூர்பரமன் மோனமந்த்ர
நிலைகாட்டும் நியமங் காட்டி
மேலையுறு கரம்பொன்னே வேலிறையா
மறுமுகற்கு விமான மாமே. 6

சரவணமே குருநாதன் சண்முகமா
முருக்காட்டும் தடம தாலுற்
சரவணமே குருநாதன் மஞ்சமெனப்
புராணமது சாற்று மாலுற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணமே குருநாதன் திருவிளையாட்
டிடமாகிச் சாரு மாறற்
சரவணையின் பாங்கருறு கரம்பொன்னே
சரவணற்குத் தலமா மன்றே! 7

*பாலணையுஞ் சமயத்தோர் காணுத
உருவுடையாய்! பாரின் மேவு
நூலணையா நுண்ணியனே! ஞானசத்தி
வடிவமென நுவலா நின்ற
சேலணையும் விழியுமையாள் தன்பெயரால்
அளித்தருளுந் தெய்வச் செங்கேழ்
வேலணையுங் கரதலத்தோய்! வேலணைசார்
கரம்பொனில்வாழ் விமலா! போற்றி. 8

சாதனசம் பந்நராய் நின்னடியே
தஞ்சமெனச் சாரு மன்பர்க்(கு)
ஆதரவாஞ் சடகர்ம வேதமறிந்
துடலுயிரை யமல மாக்கிச்
சோதிவடி வாயொடுங்குஞ் சிவாத்துவித
முத்தியருள் தாயோய்! போற்றி,
வேதநெறி தழைத்தோங்கக் கரம்பொன்னும்
பதிபுரக்கும் விகிர்தா! போற்றி. 9

பொல்லாத புலாற்றுருத்தி பூந்துருத்தி
யாய்நிலவப் புனித மாக
நில்லாத பவுதிகபஞ் சீகரண
நிறைமாற்றும் நிமலா! போற்றி,
சல்லாப விநோதனே! சாந்தசிவ
சண்முகனுந் தலைவா! போற்றி,
மல்லாருந் தடம்புடைசூழ் கரம்பொன்னும்
பதிபுரக்கும் வரதா! போற்றி. 10

*பாலணையும் சமயம்—'ஊழ்கண்ட சமயம்' (பால்-ஊழ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளுறு மவநெறிகள் நிலைபாறச்
சிவநெறியே யினிது வீறக்
கள்ளவிழ்பூங் கடம்பணியுங் காளையாய்க்
கந்தழியாற் கசடு நீங்கி
வள்ளியொடு கொடிநிலையும் மருங்கமைய
ஓவடிவின் மன்னு நிற்கும்
புள்ளிமயின் மிசைவருவாய்! கரம்பொனில்வாழ்
புண்ணியனும் புலவ ரேறே! 11

உள்ளதையே சொன்னக்கால் நொள்ளைக்கு
நோக்காடென் றுயர்ந்தோர் யாரும்
உள்ளுழுது மொழிதனக்கே யாளானோர்
உண்மைகளை யுணரார் அந்தோ!
கள்ளமனக் கசடகற்றி யடியனையும்
ஆண்டருளுங் கருணை போற்றி!
தெள்ளுமணி பலகொழிக்குங் கடல்புடைசூழ்
கரம்பொனில்வாழ் சிவமே போற்றி 12

## வாழ்த்து

செந்தமிழ்நாட் டொருபாக மாகிமிளிர்
ஈழமெனுந் தேயம் வாழி,
அந்தமில்சீர்ச் சிவாலயமுங் குகாலயமும்
அரனடியார் குழாமும் வாழி,
சந்ததமும் வியாபகமாந் தமிழ்வாழி,
சைவநெறித் தலைவர் வாழி,
நிந்தையிலாக் கரம்பொன்னும் நின்மலசண்
முகனருளும் நீடு வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் காரைநகர்
மணிவாசகர் சபையினரால் வெளியிடப்பட்ட
***மணிவாசகர் விழா மலர்***

# *வாழ்த்துரை*

## வெண்பா

*மணிவா சகசபையை வாழ்த்தி மகிழத்*
*தணிவில் அருளைத் தருமால் — அணியார்*
*மணக்குளத்து வாழும் மதகளிறு நாயேன்*
*நினைக்குளத்து நீங்காது நின்று.*

## கட்டளைக் கலித்துறை

*திருவா சகப்பொருள் யாதெனுந்*
*தில்லை மறையவர்முன்*
*அருவாய் மறைந்துண்மை முத்தி*
*யிதுவென் றறைந்தவள்ளல்*
*திருவா சகமுந் திருக்கோவை*
*யுந்தந்த தேசிகனுந்*
*திருவாளன் சேவடி சென்னியின்*
*மன்னித் திகழ்கவே.*

## ஆசிரியப்பா

*திருவால வாயிற் சிவபரம் பொருளாம்*
*அங்கயற் கண்ணி பங்குறை இறைவன்*
*பஞ்சமய கோசக் கற்பனைப் பண்பாம்*
*ஐவகை மன்றுதொ ரூடிய பரமனும்,*
*மாயையின் உருவாய் மன்னிய பல்வகைக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுதொ றாடிய குமர வேளும்,
கீரன் முதலாம் புலவரும் கெழுமிச்
சங்கத் திருந்து தமிழா ராய்ந்த
மங்கலப் பாண்டி வளநா டதன்கண்
போத மார்திரு வாத வூரினில்
நந்திதன் அம்சமாய் நந்தவப் பயனாய்
வந்தவ தரித்த அந்தணர் திலக!
பைந்தமிழ்ப் பாரக! பண்டித சிகாமணி!
பழம்பதி யாகும் பாண்டிநா டாண்ட
ஈண்டிய பல்புகழ்ப் பாண்டியன் தனது
மந்திரத் தலைமை வகித்திடு சதுர!
தன்னுயிர் போல மன்னுயிர் ஓம்பி
அரசுறு நுகம்பூண்ட வணிமுறை காத்தோய்!
இந்திர போகமும் குபேர சம்பத்தும்
எய்தியே இன்பவாழ் வியைந்திடு செல்வ!
அழியும் பௌதிக அசுத்தநிறை யமைந்த
உடனிலை யாமையும் உலக மாயையும்
கண்டே உவர்ப்புக் கொண்டு பற்றற்று
முத்தி வேட்கை முற்றிடும் பெரியோய்!
சீவர்கள் பக்குவச் செவ்விக் கேற்பப்
பயன்படு முறையின் மேதைகள் பல்லோர்
ஊழிற் கண்ட உவலைச் சமயமும்
ஒவ்வாச்சாத் திரமும் துவ்வா வாக
உண்மை காண்பா னுளமூ சலாட
அம்மைதொ றாற்றும் செம்மைவினை கூட்டத்
திருவார் பெருந்துறைச் சித்து மூர்த்தியாம்
சிவபரம் பொருளின் திருவடி தொழுது
கன்மபே தஞ்சட பேதம் பக்குவ
பேதங் கண்டவ னுரைத்திடு போத!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதக யோக வேதசட் டங்களை
வழுவறத் தாங்கி யொழுகிய விரத!
ஆதா ரங்களி னரிய மறையும்,
மையலாங் கடலிற் பையப் பையக்
கொடுபோந்து பாசக் கொடுந்தா ழுருவி
அன்னவன் கருணையால் அருமறைப் பொருளாய்
மௌன வித்தையாம் மகாரப் பெட்டையும்
அருளிடப் பெற்றே யுவந்திடு மண்ணல்!
என்புள் ளுருகலால் இருவினை யீடாம்
ஏற்ற மிறக்கம் விடுபடத் துன்பெலாம்
ஒருவிடும் இருவினை யொப்பும் மலபரி
பாகமும் ஞான சக்தி யுடலில்
அணுவணு வாக வமைந்திடுஞ் சத்தி
பாதமும் பெற்றுத் தீதகன் றுயர்ந்தோய்!
ஆக்கையுறு பொருளாம் விந்தி னமைந்த
கந்தெனு மசுத்த வளியும் கசடொரீஇ
அருவமாய்ச் சிவமாய் அமைந்திடப் பெற்றோய்!
பூவும் நீருங் காலும் வானும்
ஒரோவொரு புறமாய் விராவி யமைய
நந்தி யொளியா நவமான செஞ்சுடர்
அகத்தும் புறத்துங் கண்டா னந்தம்
உண்டு தன்னிலையே முன்னிலை யாக
முடிந்தமெய்ஞ் ஞானக் காட்சியின் முற்றி
முன்னிலை தன்னை விவகரிக் கும்பே(று)
அனுபவ முறையா னமைந்திட மறையாம்
வாசக மாமழை வழங்கிய வள்ளால்!
முன்னிலை கண்டு களித்திடு மூடராய்
படிப்புவல் லபமும் பட்டமும் பெற்ற
எம்ம னோரால் இம்மறை யுண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் பெற்றி பூணுதற் காமோ?
மனமும் மதியு மொன்றுற மருவலால்
சேவடி யிரண்டும் வைப்பிடந் தெரிந்தோய்!
மலபரி பாகமாங் கந்தழி பெறலால்
அசுத்தமாந் துப்பு நீங்கி யமலமாய்
விந்து உடலுள் மேவிடப் பெற்றோய்!
"கடக்களி றேற்றாத் தடப்பெரு மத"மெனும்
விந்து மதமாம் இந்துமத முற்றோய்!
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு முதலாம்
ஊனங்க ளெட்டு மறவே யொழிந்த
ஈனமில் காயமாம் காமக் கிழத்தியை
விமல வல்லியாம் பேரின்பம் விளைக்கும்
பிரமக் கிழத்தியை யமல விளைவால்
கீழ்கடற் கழிதான் மேல்கடல் நுகத்தொளை
பெற்றிடு மருமையிற் பேணிக் கண்டே
காமன் வென்றிக் கொடிபோற் கவினும்
சிந்தா மணியே! தெண்கட லமிர்தே!
அந்தா மரையன்ன மே!யென வாற்றி
அனுபவக் கோவை யறைந்திடு மன்மத!
உடலுக் குயிருயிராய் உயிருக் குடலுயிராய்
பதிவிரதா தர்மப் பண்பு மேற்கொளீஇ
ஒன்றுறக் கூடிக் குழைந்தோ வாது
காமக்கனல் கதித்து மூழ்கி யெழுந்து
ஊனம் நீங்கி ஒளிமய மான
அமல வுடலம் அமைதரப் பெற்றோய்!
உடலின் மாத்திரை யரையா யுறலால்
தாமத வியக்கமு முயிரின் மாத்திரை
ஒன்றா யுறலாற் றீவிர வியக்கமும்
இலயதலால் இரண்டுஞ் சமமுற வியங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலு முயிரு மொன்றறக் குழைய
அசுத்த வூச லாட்டம் ஒழியப்
பொன்னூச லாட்டம் பொலிதரப் பெற்றோய்!
ஊச லாட்டும் உடலுயி ராயினை
இருவினை சமமா யியைந்திடப் பெற்றோய்!
சையொத் திருத்தலாற் செய்வன செய்யும்
சதுரப் பாடும் சமைந்திடப் பெற்றோய்!
இறையனு ரகப்பொருட் கிலக்கிய மாய
கோவையின் மாண்பு கூறவும் படுமோ?
அனுபவ முறையே கோவை யாக
நின்போ லமைத்தோர் நீணிலத் துளரோ?
கழறி யுரைத்தலாம கவியினி லுடலுயிர்
அழியா வுண்மை அமைத்தே யருளினை!
இரவுக்குறிக் கவியில் மாற்றிப் பிறந்தே
ஈசனை யடையும் இயற்கைநிலை கூறினை!
புகலிட மாகிய ஊரிற் புகுந்து
ஊரனாய் உலகுக் கூதிய மாயினை!
மேலை யணைவிற் காலிரண்டு மிட்டு
கதவந் திறந்து மறைக்காடு கண்டே
அமல நாதங் கேட்டே உடலம்
நாத சரீர மாய்ஞான சத்தி
வடிவ மாக வயங்கிடப் பெற்றோய்!
நடனமே அசைவாம் நாதமும் அதுவே
"நடனங் கண்ட போதே யென்றன்
சடலஞ் செய்த பாக்கிய" மென்றே
முத்துத் தாண்டவனும் மொழிந்தன னன்றோ?
அள்ளூறுக்கை பெற்றருள முத்த மருந்தினை!
தில்லைவா ழந்தணர் திருவா சகப்பொருள்
யாதென வருட்பெருஞ் சோதி யாகி
மன்றினுள் மறைந்த மாணிக்க மணியே!
உண்மை முத்திநிலை இதுவென வுலகோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் கூடாகக் கண்டே யறியக்
காட்டிய குருவாங் கருணையங் கடலே!
கண்ணாள! நினது கழலிணை போற்றுவன்
அருண்மதி பெரும! அருண்மதி பெரும!
தெருண்மலி மதியணி சிவமே! யருண்மதி,
பொன்பெய ரதனால் புலவர்நா டுறழும்
தென்பொலி யீழத் திருவமர் நாட்டில்
வேளாண்மை திகழும் தாளாண்மை சிறந்து
மதிப்பொலி வோடு மக்கட்பண் பமைந்து
சைவமுந் தமிழுந் தழைத்திட அருந்தொண்(டு)
ஆற்றிடு நீர்மை யமைந்திடு தீரராம்
சீரியோர் பலர்வாழ் காரைமா நகரில்
**ஈழச் சிதம்பரம்** என்ன யாவரும்
போற்றி வணங்கும் புராதனத் தலமாம்
சவுந்தர நாயகி சமேத ஞான
சுந்தரே சன்னருள் துலங்கிடு மாலய
மண்டப மதனில் மன்னிடு சபையும்,
அன்னதை நடாத்தும் ஆர்வமே யுருவாம்
கழப்பகல் வாய்மை உழப்புமேற் கொண்ட
அன்ப ரீட்டமும், ஆண்டாண்டு தோறும்
குதூகல மாகக் கொண்டாடும் விழவும்,
அறிவான் மிக்க அனுபவ சீலராய்த்
தலைமை தாங்கும் சால்புநிறை பெரியரும்,
படிப்பு மறிவும் தமிழ்ப்பண் பாடும்
விழுப்ப மார்குலமத வொழுக்கமு முளராய்
அபிமான மாகும் மமகார மிலராய்
உண்மையை நாடும் உத்தம ராகி
விரிவுரை நிகழ்த்தும் வித்துவப் பெரியரும்
அவைக்கண் விளங்கும் அன்பரும் பிறரும்
அருண்மலிசொல்லினுமரும்பெருஞ்செயலினும்
மாணிக்க மணியாம் வரத!நீ அருளிய
சத்திய நெறியாம் முத்திநெறி காட்டும்
பண்டைச் சைவப் பண்புநனி தழீஇ
நிலமிசைக் குலவி நீடுவாழ் கெனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து

**1919**

### நேரிசை ஆசிரியப்பா

ஓங்குகடல் வளைஇய வீங்குநிலப் பரப்பைப்
பண்டுநன் னடிமலர் கொண்டுதாஅ யளந்து
பால்விரி தரங்கப் பாயன் மீமிசை
அம்புயன் முதலா வமரர்போற் றிசைப்பத்
திருவநீள் செம்மணி யொருபாற் கவினக்
கருமணி கிடந்த காட்சியது கடுப்பத்
தாமரை யுறையுங் காமரு தெய்வத்
திருவொடும் பொலியு மொருபெருங் கடவுள்
வலம்புரித் தடக்கை மாஅல் போலப்
பரிதியங் கடவுள் படுபறி யாப்பேர்
இருநில முழுது மொருகோ லோச்சி
ஆணையா லளந்து மாணமர் வடவெண்
பனிக்கடன் மரீஇய பாய்புக ழாங்கில
பவுமத்துச் சிறந்து பல்வளம் பழுனி
விண்வத் துயரிய கண்செலாச் சியமத்து
மேனிலை வதியு மெல்லியன் மடநலார்
முத்துற ணகைநிலா முகமதிக் குடைந்து
களிநிலவு காலு மொளிசமழ்ப் புறீஇய
மதியமேக் கற்று வயங்குகா லதர்தொறும்
வனப்புநனி கவரும் வகைமை மேற்கொளீஇ
ஆடியிற் றிகழு மாடமா ளிகைகளும்
உலகுவி லைபோகா தொப்பின் றுயர்ந்த
அருங்கல வெறுக்கையு மொருங்குநனி காணூஉ
மணிக்கா லிஃதென நுணித்து நன்குணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளகை விடைகொள்ளு மணிநலங் கெழுமி
நிலமகண் முகத்துக் குலவுபூந் திலகம்
என்னநின் றிலகு மிலண்டன் மாநகரிற்,
பொற்றுணர் மலிந்த கற்பகா டவியொடும்
இந்திர சுதன்மையே யந்தில்வந் தமர்ந்தெனத்
தெய்வத் தபதியர் கைபுனைந் தியற்றுது
மனத்தினின் வகுத்தென வயங்குறூஉம் வனப்பின்
ஓவநுண் டொழிற்கெலா மேவுபதி யாகி
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
மணிமுடி மன்னரு மாபினிற் குழீஇ
ஆடகம் புனைந்து பீடுயர் பன்மணிப்
பாயொளி பரப்பும் பைம்பொற் கோயிலிற்,
காணுநர் கண்ணிமை பூணுற மலங்கி
இமையா நாட்டத் தியவுள ரேய்க்கும்
எழினலம் பழுனி முழுமணி யியன்று
விண்ணவர் கோமான் வியன்கலப் பேடகம்
வாய்திறந் தனைய மண்டப நாப்பண்,
மருப்பி னியன்று வச்சிரம் புனைந்து,
மரகதங் குயிற்றிய வாளரிப் பீடத்து
மன்னுபே ருதய மால்வரை முகட்டுச்
செங்கதிர் கிளர்ந்தெனச் செழுங்கதிர் பரப்புந்
தமநியத் தியன்று நவமணி குயின்ற
திருமுடி புனைந்து செங்கோ லேந்தி
அளியரேம் பன்னு ளாற்றுநல் லறமே
உருவுகொண் டனைய மருவுகோ லத்துடன்
அமையாப் பேரரு ளன்னை மேரியாந்
திருவொடும் பொலியு மரச ரேறே!
மறம்படு பண்பி னறன்கடை மலிந்து
வழியறல் காட்டும் வழியென வுணராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிநெறி பயின்று பல்குவளங் கொண்மார்
அறனுறு நெறிவழாஅ வைவரொடு சினைஇப்
பொருதுகளத் தவிந்து கிளையொடு மாண்ட
வணங்கா மணிமுடி மன்னவ ரேறுந்
துன்மதி நிலைஇய சுயோதனா தியர்போல்,
உலகெலா நடுங்க வுருமிற் சீறூஉச்
செருமாண் யவனரொடு சேரவுத் தியர்முதல்
விடங்கெழு படையின ருடங்குதுணை யமைதர
மண்ணசை இயெழுந்து வஞ்சி சூடிய
எஃகு மஃகிய சேகிற் றிகழ்ந்து
நன்மாண் பறுமுளச் சர்மா னியரொடு
சேரார் நெஞ்சந் தெருமர றழைப்பக்
கடிகெழு முரசின் மிடியென முழங்கப்
பரவைநுண் மணலினும் படுபிணம் பல்கி
அலைபொரு நெடுங்கட லழுவந் தூர்ப்பத்
தரியலர் முனைகெடு சதக்கிகி யாதிய
பெரும்படை தாங்கி யொருங்குடன் றெழீஇப்
பரவுநில வுலகத்துப் பொருவிறந் தமையாது
தேவருல கத்துஞ் செருப்புகன் றெழுந்தென
மானமீ திவர்ந்து வானகந் திரிதரு
நோனா ருட்குந் தானையொடு நிலைஇ
ஐயாண் டகவை யாற்றலி னையாது
பெட்புறு நுண்மதிப் பிரான்சிய ராதிய
கட்புலம் புரையு நட்புறு மன்னவர்
சென்றுடன் கெழுமச் செங்களம் பொருது
பருவா னிறைந்த விருநில மாந்தர்கள்
தெருமரல் கழிப்பித் தெளிந்துமன் றிகழ
அறிவரு ளாண்மையோ டுறுபெரு வென்றியில்
ஐரோப் பாவெனு மாரிய பவுமத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநீ யாகித் தோன்றி மருவிய
ஒன்ற ரஞ்சுந் துன்னருந் திறலொடு
விறலமை வென்றி திறனுறத் தெரிக்கும்
*ஜ்யார்ச்செனும் பெயரா ணியாவரும் போற்றிட
வாடா வாகை சூடுபெரு விறலோய்!
புண்ணிய பூமியாப் புகன்றிட நண்ணிய
பாடல்சால் சிறப்பிற் பரத கண்டமும்
திருமூல னென்னப் பரவுதமிழ் முனிவரன்
சிவபூமி யிதுவெனச் செப்புபல் வளஞ்சால்
ஆழிசூ ழிலங்கை யாதிய பலப்பல
எண்ணமர் தேஎந்தொறும் தண்ணளி மலிந்து
தரளங் குயின்று மணிகால் யாத்துக்
கருளகன் றிலகி யருளொடு கெழீஇய
விண்டிகழ் மதியினை மிகையெனச் செயூஉம்
வெண்குடை மதியம் வெண்ணிலாச் சொரிதரப்

---

* தாய்நாட்டார் ஜியார்ச் என வழங்குவர். ஜி - வெற்றி, அர்ச் - தேடியவர் - அடைந்தவர், ஜோர்ச்சென்பதை இதன் மரூஉ போலவுங் கொள்ளலாம்.

மேரி :— மா + ஈ + ரி = இலக்குமியின் தன்மையை அடைந்தவள். மா - லட்சுமி, ஈ - சக்தி, ரி - அடைந்தவள். ரீங்கார சொரூபி எனினும் ஆம். ஆகவே அகவல் கூறியவாறு இருவரும் திருமாலும் இலக்குமியும் போலத் திகழ்ந்தனர் என்பது மிகையாகாது.

'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே' என்பது திருவாய்மொழி - வேதவாக்கு.

ஜோர்ச்சென்பதும் மேரி என்பதும் ஆங்கிலமொழிகளே எனினும், சிறிது கற்பனையாகவும் விநோதமாகவும் பொருள் கூறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுயர் வரையகம் பொதுத்திடு சேகுடை
ஏக சிருங்கியா வியம்புகோண் மாவுடன்
அரிமா பொறித்த வுருகெழு நெடுங்கொடி
சுடரொடு கொட்புற்றுத் திரிதந் தசைஇ
விண்ணகந் தூர்த்து வெயில்கால் சீப்ப
உலக பாலக ருருவா யிறைவன்
தன்னரு ளாணை தாங்கி மன்னிய
இறையெனப் புகலு மறுவறு கொற்றத்(து)
ஐவகை நெறியா னமைந்திடு பயந்தீர்த்து
மறநெறி நீக்கி யறநெறி போற்றி
மன்னுயிர் புரக்கு மன்னவர் மன்ன!
சின்னு ளிலங்கையின் மன்னராய்ச் செறிந்த
சாலாக் கல்வி மாலார் மதியினர்
தீநெறி தழுவாது நூனெறி தழீஇ
நின்கீழ் வாழுநர் புன்கணுறா தென்றும்
அரசுமுறை பயிலிய திருவுறு மாங்கிலத்(து)
உயர்தரக் கல்வி யுரிமையி னுறீஇயர்
விழுப்பமார் குலமத வொழுக்க மிழுக்காது
இயல்புளி யியன்று குலவுமா நிறுவிச்
செங்கலங் கனிந்து செழுஞ்சுவை கொழிதரு
செந்தமிழ் முதலா முந்துமொழி வளர்த்து
நன்னலம் புரியு மின்னருட் குரிசில்!
அல்லன வொரீஇ நல்லன மரீஇப்
பொதுநீக்கி யுலகம் புரந்திடு பண்பிற்
புரையுந ரில்லாப் புரவல! நின்னையே
மெய்ம்மையின் வழாநிலை கைவரு நீர்மையிற்
சத்தியந் திகழரிச் சந்திர னென்கோ!
தண்ணளி யுடைமையிற் றருமனே யென்கோ!
நீதியின் மனுநெறி நேரிய னென்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநன் னாட்டு மேவுதமி ழரசனுஞ்
சொல்லமர் நீதியி னெல்லாள னென்கோ!
அதா அன்று
தவறில தெனினுந் தவறுபெரி துடைத்தெனத்
தன்கரங் குறைத்துப் பொன்கரம் புனைந்த
ஈண்டிய பெரும்புகழ்ப் பாண்டிய னென்கோ!
வென்றியி லாரிய மன்னரை வென்றிடுங்
குன்றா விறற்செங் குட்டுவ னென்கோ?
அதா அன்று,
செங்கண்மால் கடவிய செழுந்தேர் மிசையசைஇப்
பாரதப் பெரும்போர் வீரர்தங் குழுவெலாந்
தெய்விகப் படைகளா னைதகக் கோறிய
அழியா வென்றி அருச்சுன னென்கோ!
ஈங்கிவர் புகழெலா மென்னுமீ டிலவே
யாங்ஙனம் புகல்கேன் யாரைநே ருரைக்கேன்
தண்ணளி யரும்பிச் சாமநெறி மலர்ந்து
பகையின் றுயர்ந்த பண்புபல பழுத்தலின்
உலகெலாம் வணங்கும் மொருதனி யரசாம்
நின்னருந் தந்தையு மன்னவ னன்னையாம்
மன்னுயிர்க் கிரங்கு மின்னருட் செல்வி
பெருநில முழுதா ளுரிமை தனாஅதெனும்
உரைபெறு திருநாட் பெரிதுளங் கவன்று
கண்பனி துளிப்பக் கசிந்துமன் னுருகா
அரசுறு நுகர்பூண் டவனிமுறை காத்தல்
அம்ம! மற்றிஃ தருங்குரைத் தாலெனக்
கனிவாய் விண்டு கழறுமொழிக் கேற்ப
வாய்மையும் பொறையுந் தூய்மையு நிறையும்
அறம்புரி சீர்மையுந திறம்பிடா முதல்வி
விசயலக் குமியே மேதினிக் கரசியாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியில்வந் தன்ன வடிவுகொண் மெல்லியல்
மகளையு மொருகான் முறைபுரிந் தாண்ட
வசையறு புகழின் விசயமா தேவியுஞ்
சான்றபே ரருளிற் றலைமைபெற் றுயர்ந்து
நயனொடு புரிந்த பயனுறு பண்பெலாம்
ஒருருக் கொண்டென நீதிகழ்ந் தனையே!
அதனல்,நின்பெரும்புகழ்தானின் குல முதல்வர்கள்
மன்பெரும் புகழினு மாண்புநனி யுடைத்தே!
அவைதாம், ஆயிரம் கவைநா வரவம் புகன்றிட
ஆயிரங் கரமுடை யசுரன் பொறிக்கினுந்
தன்னமு மமையா மன்னுசீர் மையவே
அதா அன்று,
கடைபோக வுணர்ந்து தடையறக் கூறுதல்
சதுமறைக் கிழவற்குஞ் சாலா தெனினே
யானீண் டுரைத்த லேழைமைத் தன்றே!
ஆயினும்,
கோனேக்கி வாழுங் குடிகடா மெனவும்
அம்புவி வாண ரனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறையே யெனவுந்
திருவுடை மன்னவன் றிருமா லென்னவும்
பெரியார் பணித்த வுரைசால் பொருண்மொழி
நினைதொறு நினைதொறு நெக்குள முருகி
ஐந்துதலை யிட்ட வைம்பஃ தென்னுநின்
பிறப்பிய லாட்டைச் சிறப்புநனி காணூஉ
ஆராக் காதன் மீதூர்ந் துன்புகழ்
கூறுதற் கமைந்தனன் குறைகொளா தருண்மதி!
திறைசொரி மன்னவர் முறைமுறை வணங்குநர்
மணியுற ழணிமுடி வருடுநின் கழற்கான்
மன்னுபே ரன்பிற் சென்னிமிசைக் கொளீஇ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகருள் காரணன் றிருவருள் போற்றுவன்!
நீடுபே ராயுளுங் கூடுகலை யுணர்வும்,
அழியாப் புகழுங் கழிபெருஞ் செல்வமும்,
ஒன்னார்த் தெறலு மன்னுயிர்க் கருளும்,
அன்பு மறனுந் தாங்கி யின்புறூஉம்
பொருளாட்டியா மேரியுடன் கெழுமிப்
பன்னூ லாய்ந்த செந்நெறிக் குரிசில்
அரசுவீற் றிருக்குந் திருவுறு குமரனும்
எட்வேட் டென்னு மிளங்கோ வாதிய
மக்களு மாண்பம ரொக்கலுஞ் சூழ்ந்திட
நண்புறு மரசரா மன்பரொடு மரீஇ
ஒருகுடை நிழற்கீ ழுலகெலாம் புரந்து,
பாயிரு டுமித்துப் பகல்கான் றெழூஉஞ்
செங்கதிர் ஞாயிறு போலவும் பொங்கொளிப்
பன்மீ னப்பண் மன்னிய தண்கதிர்த்
திங்களஞ் செல்வன் போலவும்
வாழி வாழியிம் மாநிலத் தெனவே!

## நேரிசை வெண்பா

கண்ணளியன் செங்கோலன் றார்வேந்தர்க் கேறனையான்
மண்முழு தாள ஜோர்ச்சென்னு மன்னவனை — விண்ணவர்கள்
போற்றுதிரு மாலன்றிப் பூவேந்த ரொப்பரோ?
மாற்றமிதற் கென்னே மதி.

மண்முழுதுந் தாவி மகிபாலர் கைகூப்ப
விண்முழுது மேவி விளங்கியதே — பண்ணமைந்த
வாமா னெடுந்தேர் வயவேந்தன் ஜோர்ச்சென்னுங்
கோமான்றன் வென்றிக் கொடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலிட்டி

க. மயில்வாகனப் புலவர் இயற்றிய

நகுலேச்சர

விநோத விசித்திர கவிப் பூங்கொத்துச்

# சிறப்புப்பாயிரம்

## 1911

திருவளர் மருமத் துருவளர்ந் தோங்கிய
தாஅமரைக் கண்ணனுந் தூஅமரைக் கண்ணனும்
உடலக் கண்ணனு மும்பரும் பிறரும்
தம்பத மொரீஇ நொந்துநின் றழுங்கிய
ஒன்பதிற் ருக்கிய வொருபன் னீருகம்
தெறுவலி தாங்கி யுறுபல் லண்டமும்
ஒருவனு யாண்ட பெருவலிச் சூரொடு
போருடன் றிடுவான் 'புலவர் குழாத்தொடு
மகேந்திரத் திறுத்த வடியிலை நெடுவேல்
வலன்றிரி யியவுள் மகிழ்ந்துமன் னுயிர்கள்
வழிபடன் முறைமையை விழுமிதி னுணரியர்
வாசமா மலர்கொடு பூசனை புரிந்து
திருவுளம் பற்றிய சிறப்பினின் வழாஅ
மூர்த்தியுந் தலமும் முழங்கிடு சாகர
சங்கம மாகச் சார்ந்து பேரன்பின்
விதியுளி மூழ்குநர் கதிபெறுந் தீர்த்தமும்.
மன்னிய சிறப்பிற் றன்னிக ரிலாத
நகுல கிரியமர் நகுலாம் பிகையெனும்
நங்கைபங் குறையு மங்கண னடிக்கீழ்
வடமொழி யோடு வயங்குதென் மொழிகளில்
வழங்கு மலங்கார வகைபல வவற்றுட்
கற்றற் கரியவா யுற்றிடு மாலை
மாற்றே யெழுத்து வருத்தநன் னாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தஞ் சருப்பதோ பத்திர முதலாஞ்
சொல்லணி பல்ல புல்லுபு பொலிதரப்
பொருளணி மலிந்த புலஞ்சால் சிறப்பின்
விழுமிய சொற்பொரு டழுவுசெந் தமிழாற்
காப்பு முதலாக யாப்புறு கவிகள்
ஈரைம் பஃது டனிருபா னெட்டென்
அளவினோ டமைந்த வளவிய விசித்திர
கவிப்பூங் கொத்தெனக் கருதுபெயர் கொளீஇ
விளங்குநூன் மாலையை யுளங்கொளப் புனைந்து,
விண்ணம் பொலிந்த தண்ணென் கதிர்கால்
மதிய மேக்கற்று மயங்குமா ளிகைகளும்,
வரம்பிலாப் பாடை மாந்தர்கள் குழீஇ
இருநிதி மலிந்து பெருவளஞ் சுரத்தலின
அளகை புறங்காட்டு மாவண வீதியும்,
பொருந்திய சிறப்பிற் திருந்திய செங்கோன்
மன்னவர் கோவிலாய் மன்னிய விலங்கையின்
தலைநக ராகிக் குலவிய கொழும்பெனுந்
திருநக ருறையும் பிரபு சிகாமணி
பொன்னம் பலப்பெயர் மன்னிய பெருந்தகை
செய்தவப் பயனாத் திகழ்ந்திடுஞ் செம்மல்,
ஆங்கில மென்னுந் தேங்குபே ருததியை
ஒருங்கு குடித்த பெரும்புய லனையான்,
ஆரிய மொழியுட னரியசெந் தமிழும்
ஆய்ந்துணர் கேள்வி வாய்ந்திடு மறிஞன்,
மண்ணவர் மதிக்கும் மாண்புடைக் கோமான்,
அறிவினி லுயர்ந்தாங் கரசருத் தியோக
நிலையினு முயர்ந்து தலைமைமிக் குடைய
சாசனாத் தியட்சனாச் சார்ந்திடு பெரியோன்,
வள்ளன்மை மலிந்த வொண்ணிதி படைத்தலின்
முன்னா ளிலங்கையின் மன்னாய் நிலவிய
பொன்கிழா ரென்னப் பொலிந்து " **பொன்கிழார்** "
மாளிகை வதியும் மன்னர் சிகாமணி,
பூதி கண்டிகை புனைந்துபே ரன்பொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடி பரவுஞ் செவ்விய நீர்மையிற்
சைவநெறி பழுத்த திவ்விய நிலையினன்,
கருணையொடு பொலிந்த பரமா னந்த
நான்மறைக் கெட்டா ஞானமே வடிவாய்க்
கதிர்கா மத்துறை கந்தவே ளடிமலர்
கனவினு மறவா மனமுறு தியான
மோனநன் னிலைவழா ஞா அன நெறியினன்,
சட்ட நிருபண சபையுறு முதுவருள்
தலைவனுய் நீதி நிலைதிறம் பாதோன்,
தன்திருப் பெயர்தான் தகுமியிற் பெயரொடு
காரண மாகவுங் கருதுமா நின்ற
மலர்க்கணை யில்லா மதனெனும் வடிவான்,
அருணு சலப்பெய ராண்டகை தனுது
தமிழ்க்கலை யிறைமைக்குச் சான்ற திறையாகத்
தாழ்வுறு நீர்மையிற் சமர்ப்பணஞ் செய்தே
புலவர்பே ரணியெனத் தலைமிசைக் கொண்மார்
ஆய்ந்து மணங்கொழீஇ அருஞ்சுவை பெறீஇயர்
எழுதா வெழுத்தின் வழுவின் றமைத்து
வெளிப்படுத் துதவி மிருபுகழ் கொண்டனன்,
செந்தமி ழணங்கு திருநடம் புரியும்
திருவநீ ளரங்கென மருவுயாழ்ப் பாண
நன்னக ரதனிற் பொன்னக நிகழ்தென
மன்னுபல் வளஞ்சால் மயிலையம் பதியான்,
நள்ளார் போற்று நலமுறு கணபதிப்
பிள்ளைமுன் னுஞற்றிய பெருந்தவத் துதித்தோன்,
மங்குல் கண்படுக்கும் பொங்குபூந் தருக்களின்
விண்மணி வெயில்புகாத் தண்மணி நிழற்கீழ்ச்
செந்தார்ப் பொலிந்த சிறுபசுங் கிளிகள்
மேவிய காதலிற் பூவைகட் கென்றுஞ்
செந்தமிழ் மொழிகளைச் செவ்விதிற் பயிற்றல்
தம்பயன் கருதாத் தன்மையின் மரீஇ
மாணவர் தமக்குப் பேணியே நாளும்
கலையமு தளிக்கும் நிலைமையின் வழாஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றமை புலத்திற் சான்றோர் செயலென
இறும்பூது பயக்கு நறும்பொழி லுடுத்த
சுன்னைமா நகரின் மன்னுபே ரறிஞன்,
எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருளும்
செல்வர் தமக்கே செல்வமென் றுரைத்த
பொய்யில் புலவன் பொருளுரைக் கிலக்கியம்
ஆகப் புகலும் சோகமில் பெரியோன்,
வடமொழி தென்மொழிக் கடனிலை கண்ட
இத்தலம் புகழும் வித்துவச் சிரோமணி'
அளியனேன் மனமா மணிநீர்ப் பொய்கையில்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்
துங்கமார் குமார சுவாமிப் புலவனைக்
குரவனுக் கொண்ட கொள்கையி னுயர்ந்த
செந்தமிழ்க் கலைபல செவ்விதிற் கற்றோன்,
ஆங்கில பாடையு மாய்ந்தநுண் மதியினன்;
இணுவையம் பதியி னணியசெவ் வேற்கரப்
பண்ணவ னடிக்கீழ்ப் பதிற்றுப் பத்தெனும்
அந்தாதி மாலையு மழகுறு மயிலை
மும்மணி மாலையு முன்னூறு 'மிரட்டை
மணிமாலை யூஞ்சல் வயங்கு திருநீல
கண்டர் விலாசமுங் கொண்டபல் வகையிற்
பதிகமும் பாடிய மதிமிகு புலவன்;
நியாயநூற் பரப்பா நெடுங்கடல் முழுகி
மன்னவ ரளித்த மாண்புமிக் குடைய
சாசன மெழுதுந் தலைமைகைக் கொண்டோன்;
பிள்ளைமதி முடித்த வெள்ளியங் கிரியமர்
முக்குணங் கடந்த முன்னவ னடிமலர்ப்
பரிவின் பண்பே யுருவுகொள் பான்மையன்;
பயிலுதன்ன புடைய பண்பின்
மயில்வா கனப்பெயர் மன்னுபா வலனே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னுகம்

## குமாரசுவாமிப் புலவர் இயற்றிய

### சாணக்கிய நீதிவெண்பாச்

# சிறப்புப்பாயிரம்

## 1914

உலகுபுகழ் வடமொழியி லுயர்சாணக்
        கியகவிஞன் உரைத்த நீதி
குலவியநூ லுறும்பொருளைப் பத்தழகும்
        நவரசமுங் குதிகொண் டாட
நிலவுதமிழ் வெண்பாவி லவ்வைமொழி
        யிதுவென்று நிலத்தோர் கொள்ளப்
புலவர்புது விருந்துகொளப் பெயர்த்துரைத்தான்
        யாவனெனிற் புகலக் கேண்மோ. (1)

மன்னியசெந் தமிழ்மொழியும் வடமொழியும்
        இனிதுணர்ந்தோன் மாசில் வாய்மை
நுன்னிமிகு குணக்குன்று கவிஞர்சிகா
        மணியாகத் துலங்குந் தோன்றல்
பன்னுமெய்போல் வார்பலர்க்குப் பல்கலைநூல்
        அளித்தருளும் பரோப காரி
சுன்னையெனு நகராளி குமாரசுவா
        மிப்பெயர்கொள் சுகுணன் மாதோ. (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னூலைக் கட்டுவன்

வித்துவான் சி. கணேசையர்

இயற்றிய

இரகுவமிசப்புத்துரைச்

# சிறப்புப்பாயிரம்

## 1915

மாமேவு வடமொழி தேர் கவிஞரெலாம்
பலநெடுநாள் வருந்தி நோற்ற
தூமேவு தவப்பயனாய்ப் போந்துகவி
மழைபொழிந்த சொர்ண மேகம்
கோமேவு கவிகாளி தாசனென
உலகுபுகழ் கோமான் செய்த
பாமேவு விசயரகு வமிசமறி
ஞருக்கமிர்தாய்ப் பயிலு மாதோ. (1)

அன்னவட நூற்பொருளைச் செந்தமிழிற்
பத்தழகு மணியுந் தோன்ற
முன்னையநூ னெறியனைத்து மினிதமையக்
காப்பியமா மொழிந்தான் முன்னாண்
மன்னியயாழ்ப் பாணமுறு மன்னவர்கள்
குலதிலகன் மருவா ரேறு
தன்னிகரிற் கேள்வியினன் பேரரச
கேசரியாந் தகையான் மிக்கோன். (2)

கற்பவருக் கருங்குரைத்தா யருந்தொடரும்
பொருள்கோளும் கரந்து நின்ற
சொற்பொருளு மிகமலிந்து காப்பியங்கட்
குளவாய தொல்லை மாண்பும்
பற்பலவாய் யாழ்ப்பாணப் புலவர்குழாம்
பரம்பரையிற் பயிலுமாறு
நிற்பதுகண் டிந்நூலு குரையியற்றல்
அவசியமா நியதி யென்று; (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துரையும் பதப்பொருளுங் கடாவிடையும்
இலக்கணமுங் காட்ட தாகப்
பொருத்தமுறு மேற்கோளும் எளிதுணர்தற்
பாலனவாய்ப் பொருந்து மாற்றால்
திருத்தமுறும் புத்துரையொன் றறிஞருள
மகிழ்பூப்பச் சிறப்பச் செய்தே
அருத்தியுடன் வெளிப்படுத்தி உபகரித்தோன்
யாவனெனி லறையக் கேண்மோ. (4)

செந்தமிழி லிலக்கணமு மிலக்கியமுங்
கரைகண்டு தெளிந்த தீரன்
முந்துபுக ழுறுபொன்னம் பலப்பிள்ளை
எனப்புகலு முதல்வன் பாலுஞ்
சிந்தையுறை தருசெம்மல் செந்தமிழும்
வடமொழியுந் தேர்ந்த கோமான்
கொந்தலர்பூம் பொழிற்சுன்னைக் குமாரசுவா
மிப்பெயர்கொள் குரவன் பாலும். (5)

பாவியலு மிலக்கியமு மிலக்கணமுங்
கற்றுணர்ந்தோன் பரந்து கொண்மூக்
காவியலும் புன்னைநகர்க் காசிபகோத்
திரத்துதித்தோன் கற்றோர் தங்கள்
நாவியலும் புகழாளன் சின்னையவேள்
புரிதவத்தா னண்ணும் பாலன்
கோவியலும் புலமையினன் கணேசனெனும்
பெயர்படைத்த குருசின் மாதோ. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவன்

வித்துவான் சி. கணேசையர்

இயற்றிய

சொல்லதிகார உரைவிளக்கக் குறிப்புச்

# சிறப்புப்பாயிரம்

## 1938

பூநீர் தீவளி வானெனப் புகலும்
ஐந்திணை மயக்கா னமைந்த திவ்வுலகே!
ஓங்காரி யான வுமையவ ளன்றோ
ஆங்காரி யாகி யையவரைப் பெற்றனள்!
அந்தணர் மறையெனு மரியதத் துவமாய்
வியாப்பிய மாகி மேவுமா ரியமாம்
மகாரத்து நின்று விசர்க்கமென மரீஇ
மாவென விரிந்து மலர்ந்தவிப் பவஞ்சம்
சொற்பொருள் வடிவாய்த் துலங்கிடு மன்றோ!
வியாப்பிய ஆரியங் கௌணமாய் மேவிட
வியாபக மாகி மிளிருமற் றிதுவே
தமிழெனச் சாற்றினர் தத்துவப் பெரியார்
இயற்கை நன்னெறியா வியம்புகுரு நெறியால்
நிறைமுறை தழீஇ நின்றுழி யிதுவே
அமிழ்த மாகி யமைதரு மன்றோ!
தமிழமிழ் தேயெனச் சாற்றுபொரு ளிதுவே
ஒலிகட் கெல்லா மொருபிறப் பிடமாய்
நாத பீடமெனும் வேத வந்தமாய்
அன்னதை அணவு மாரிடர் தம்மால்
அறிந்திடு மறையாய்ச் செறிந்துள தடமாம்
அந்தணர் மறையை யனுபவத் துணர்ந்து
வேத வந்தமாய் விளங்குமெய் யீறும்,
சித்தி னந்தமெனத் திகழுயி ரீறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரச மாகத் தமிழை யமிழ்தாக்கி
வேதாந்த சித்தாந்த சமரச மிளிர்தர
அமிழ்த வடிவென வருமறை முழங்கும்
முன்னிலைப் பிரமந் தன்னிலை யாக
நித்தியம் பெறீஇய தத்துவப் பெரியராம்
அகத்தியர் அனைய வருந்தவச் சித்தரே
வியாப்பியம் பிரதம கலையென மேவ
உபய கலையாய் ஒலிவரி வடிவாய்
வியாபக மாகி விளங்குதமிழ் கண்டு
எழுத்துச் சொற்பொரு ளியலுற வுணர்ந்தோர்
ஆதலி னன்றோ மேதகு புலவனும்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனும்
எழுத்தி னிலக்கணம் வழுத்தப வுணர்த்துதல்
தனக்கிய லாதெனத் தண்மதிப் பொலிவால்
"அந்தணர் மறைத்தே" யென் றமைந்தனன் மன்னோ!
'மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்று' வென
உரைத்தது மீங்கிதற் குறுசான் றாமே,
எல்லாச் சொல்லும் பொருளுடைத் தெனினும்
வாய்மையே போலி யாகிமன் னிடலால்
வாய்மையின் பெயரே போலியும் பெறலால்
மாயையி னீர்மையு மதுவா தலினால்
மாவெனப் பூத்த ஐயெனு மாயையின்
மாளாந்து நாளும் வருந்துபு மாளும்
சீவர்கள் வாய்மையின் திறன்தெரி கிலரே!
எழுத்திய லதனிற் பழுத்தநல் லறிவால்
மெய்யுயி ரொருமை கைவரத் தெரித்தே
ஏனைய வோத்தினும் யாமினி துணர
இந்துமத வுண்மை இயல்பெற வுணர்த்திய
புலவன் மாண்பு புகலவும் படுமோ!
இன்னன 'வேத' வுண்மைகள் மலிந்தவித்
தொல்காப் பியமெனுந் தொல்லிய நூலுக்(கு)
உலகியற் கொப்பக் குலவுநல் லுரைகள்
கண்டனர் பலரே! பண்டைய விந்நூற்
சொல்லதி காரக் கொல்லும் வகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனா வரையனார் செய்திடு முரையே
திட்ப நுட்பந் திகழுநன் நடையான்
இயன்றதெனப் போற்றுவர் இயற்றமிழ் வாணர்.
அன்னபே ருரையின் அமைந்தநுண் பொருளை
மயக்கமற விளக்கி மற்றையோ ருரைகளும்
ஒப்பு நோக்கி விகற்பமு முணர்த்தி
ஒருதலை துணிந்துந் தன்மத நிறுவியும்
குறிப்புரை யறிஞர் குறிக்கொள வரைந்தே
மாணவர் குழாமு மருவுமா சிரியரும்
யாவரு மெளிதில் உணர்தர விரிவான்
உதவிய புலவன் உவன்யா ரெனினே!
புனிதஐ இலங்கும் புகலிடந் தெரிக்கும்
இலங்கைப் பெயரிய ஈழமண் டலத்தின்
சிரமெனத் திகழ்ந்து பரவுசெந் தமிழின்
யாண ரருதயாழ்ப் பாணமாந் தேத்துப்
புன்னையம் பதியினன் மன்னிய காசிப
கோத்திரத் துதித்த குலநல முடையோன்
இத்தலம் புகழும் வித்துவன் மணிகளாம்
நல்லூர் ஆறுமுக நாவலன் மருகன்
பொன்னம் பலவனும் புலவன் பாங்கரும்,
என்போல் வார்பலர்க் கியற்றமிழ் தெரித்த
சுன்னைக் குமார சுவாமிப் புலவனும்
தோன்றறன் பாங்கரும் தொன்மைசா லிலக்கண
இலக்கிய நூல்பல இனிதுகற் றுணர்ந்தோன்.
தொல்காப் பியமும் தொல்காப் பியங்களும்
மாணவர் பலர்க்கு வரன்முறை பயிற்றிய
பீடுசால் அனுபவ பெற்றிகை வந்தோன்,
இலக்கண வுணர்ச்சியி னித்தமி ழகத்தே
இணையிலா துயர்ந்த இயற்றமிழ்க் குருசில்,
தமிழொடு சமக்கிருத சாகரங் கடந்த
புரசை மால்களிற் றரசகே சரியெனும்
அரசிளங் குமரன் அமைத்த காப்பியமாம்
இரகுவம் மிசத்துக் குரைகண்ட விபுதன்,
மதுரைச் சங்க மருவுசங் கியையாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செந்தமிழ்' இதழிலும், திருநந்தி யாணையால்
புதுவையிற் றோன்றிப் புராதன சைவ
முத்திநிலை காட்டும் 'வித்தக' இதழிலும்
தமிழறி வோங்கத் தன்மதிப் பொலிவால்
கட்டுரை வரைந்த கல்வி யாளன்,
என்பா னன்பு பண்புறக் கொண்டோன்,
விழுப்பட்டார் குணனும் ஒழுக்கமு மமைந்து
முத்தி வாயிலென வேதநூன் முழங்கும்
விக்ன விநாயக விழுப்பே றளிக்கும்
கணேச னடிமலர் கனவினு மறவாக்
கணேசையப் பெயர்கொளுங் கவிஞரேறே!
இன்னகுறிப் புரையோ டிந்நூ லுரையினை
எழிலுற வச்சிட் டியாவர்க்கு முதவும்
'ஈழகேசரி' இதழுக் கதிபனும்
பொன்னைய நாமன் புகழுமருங் குரைத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவன்

## வித்துவான் சி. கணேசையர் இயற்றிய

தொல்காப்பியப் பொருளதிகார

(இரண்டாம் பாகம்) உரைவிளக்கக் குறிப்புச்

# சிறப்புப்பாயிரம்

## 1943

அமிர்தமர் குருவா மருணிலை யளிக்கும்
தொல்காப் பியநெறி தோன்றத் தெரிக்குந்
தொல்காப் பியமெனுந் தொல்லிய னூலின்
மெய்ப்பாடு முதலாச் செப்புநான் கியலையும்
பேரா சிரியராம் புலவர் பெருந்தகை
உலகிய னாடி உஞற்றுபே ருரையுடன்
பிரதிபல கொண்டு வழுவற நாடிக்
கற்றோர் மற்றோர் யாவருங் கையுறு
கனியெனச் செம்பொருள் கண்டு நனிமகிழக்
குறிப்புரை விரிவா னெறிப்பட நிகழ்த்தினன்,
பன்மாண் புறுவளம் பழுநிய தொன்மா
இலங்கைப் பெயரிய வீழநன் னாட்டின்
திருமுக மாகி மருவுயாழ்ப் பாணப்
புன்னையம் பதியிற் றன்னிகர் காசிப
குலவிளக் காகிக் குலவுபே ரறிஞன்,
சின்னைய விப்பிரன் பன்னாட் புரிதவப்
பெற்றியே உருவா யுற்றிடு புதல்வன்,
செந்தமி ழிலக்கணச் செழுங்கடல் முகந்து
தண்டமிழ் வாணர் தமதுளப் புலமெலாங்
குளிர்ப்பப் பொழியுங் கொண்டலே அனையான்,
மணங்கமழ் தெய்வத் திளநலந் திகழுங்
கந்தழி சான்ற விந்துமத நிலைஇய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலமுதற் படியாம் விமலவாழ் வருளும்
விக்ன விநாயகன் மெய்ப்பத நாளும்
மறவாது வழுத்தும் வரமுறு பெரியோன்,
இத்தலம் புகழு மிணையிலா வியற்றமிழ்
வித்துவ கணேச விப்பிர மணியே!
இந்நூ லுரையைமுன் னியம்புரைக் குறிப்புடன்
அழகுற வச்சி லமைத்து வழங்கும்
"ஈழ கேசரி" யிதழுக் கதிபனும்
பொன்னைய நாம மன்னிய செம்மல்
தன்னுளங் கொண்ட தமிழ்மொழி யார்வப்
பெற்றியு மம்ம பெறலருங் குரைத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவன்

**வித்துவான் சி. கணேசையர் இயற்றிய**

தொல்காப்பியப் பொருளதிகார

(முதற் பாகம்) உரைவிளக்கக் குறிப்புச்

# சிறப்புப்பாயிரம்

**1948**

உலகினி லாதியா யிலகிய தொன்மொழி
பலபல தேஎந்தொறும் பண்டைநாட் பயின்றே
உலகெலா மளந்த வொருதனிச் செம்மொழி
ஆயுத மநாதி காரண மாகி
வியாப்பிய வியாபக மாகி மிளிரும்
பதிபசு பாசப் பண்புநனி காட்டப்
பதினெண் மெய்யும் பன்னீ ருயிரும்
இடையின் கலைகளின் இயக்கங் காட்ட
உவற்றின் பெருக்கின் நோக்கமே நாளும்
உடல்வழி இயக்கவெண் ணுண்மை காட்ட
மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையெனும்
மெய்யுயிர் உண்மை கைவரத் தெரித்து
வேதாந்த சித்தாந்த விழுப்பொரு ளுணர்த்தி
இயற்கையின் வழாஅ விலக்கண வரம்பும்
அகம்புற வொழுக்க மமைவுறக் காட்டி
விழுமிய சொற்பொரு டழுவுசெந் தமிழால்
இயற்கை யன்னையின் வனப்புமீக் கூரச்
சங்கச் சான்றோர் தாமினி துளுற்றிய
அறிவுறு துறையெலா நிறைபல பனுவலும்
இறையனார் வள்ளுவர் இடைக்காட ரவ்வை
ஆதியோ ரருளும் அரும்பெரு மறைகளாய்
அறம்பொரு ளின்பம்வீ டடையு நெறியின்
திறந்தெரிந் துரைக்குந் தெய்விக நூல்களும்,
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு மொரீஇ
உடலும் உயிரு மொழிவற வொன்றி
அள்ளூ ருக்கையா யருளா வெளியாய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திசிவ வடிவாய்த் தாரணி கண்டிட
ஞான காசத்து நண்ணி யொடுங்கும்
அடியவ ராழ்வா ரநுபவந் தெரிந்து
முத்திநிலை காட்டும் வித்தக மறைகளாய்
ஒப்புயர் விலலாத் திப்பியம் வாய்ந்த
திருவா சகமே திருக்கோவை யாதிய
தெய்விக நூல்களும் செகந்தோர்க் கெட்டா
மன்னிய கலையென மருவு நால்வேதத்
திருநெறி யான திருகுகண மலிந்த
கருமூல மொழிக்கும் திருமூலர் முதலாம்
சித்துமூர்த் திகடந் தெய்விக மறைகளும்
சாத்திரப் பெயராற் றரணியோர் பயில
அறிஞர்பல ரமைத்த வரியயன் நூல்களும்
கற்பனை திகழச் சொற்பொரு ணயம்படப்
புலவர் பல்லோர் புனைந்தபன் னூல்களும்
தன்பாற் கொண்டு தானதனித் தியங்கும்
ஆற்றல சான்ற அமிழ்தெனுந் தமிழ்மொழி
முடியுடை மூவேந்த ரோம்பிய முத்தமிழ்
ஊழிதொ றூழிதொ ரோங்கி மும்மைச்
சங்கத் திருந்து தழைத்த தனிமொழி
என்றுமே யன்ற நிலைஇய தென்றமிழ்
தேனினு மினிய செழுஞ்சுவை கனிந்த
தெய்வச் செந்தமிழ்ச் சிறப்பினைத் தெரித்தல்
அகத்திய ரனைய வருந்தவர்க் கல்லால்
எம்ம னோருக் கியல்வதோ ! அம்ம !!
உலக மாக்களுக் கொல்லுவ தாமோ !!!
அந்நியா பலரோ ராட்சி மன்னிக்
கால கதியிற் கலங்கிய தெனினும்,
திருவருட் பெற்றி திகழ்தர வென்றும்
வழக்கு வீழாது வாழ்வுபெற் றன்றே !
தமிழக மின்றுதன் னுரிமைநலம் பெறுதலின்
நந்தமிழ் மொழியும் நலமுறத் தழைத்துப்
புத்துயிர் பெறீஇப் புதுமைநலந் திகழ்ந்து
பண்டைப் பரிசுங் குன்றாது நாளும்
அருநூல் பலப்பல வவனியோர்க் களித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுபெற் றோங்கத் திருவருள் வழங்கெனச்
சங்கத் தமிழின் தலைமைப் புலவனைச்
சாந்தசிவ வடிவிற் சண்முக நாதனை
ஞானகுரு பரனு(ம்) நங்கண் மணியினைத்
திருவடி தொழுது சேர்குதும் யாமே!
இயலிசை கூத்தென வியலபன் னூல்களுட்
கடல்கோட் பட்டன வொழிய வழிவழி
இற்றைநாட் பயிலு மிலக்கண நூல்களுட்
தொன்மை சான்றது தொல்காப் பியமே!
பிறமொழிக் கமையாப் பெட்புநனி வாய்ந்த
தன்னிலை முன்னிலை யொழுக்கெனச் சமைந்த
அகம்புற விலக்கண மழகுறத் தெரிக்கும்
ஈங்கிதன் பெற்றி பாங்குறக் கிளக்கின்
மறம்பொரு ளின்ப மரணம தொரீஇ
அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனெனும்
பொருளுரைக் கேற்ற பொற்புடைத் தன்றே
அகமே புறமே களவே கற்பே
பொருளிய லெனப் படூஉம் பொருட்பாலிதுவே
வேத. வுண்மைபல விளக்கிய தாமே!
முதல்கரு வுரியென முன்னிய மூன்றும்
பதிபசு பாசப் பண்புதெரித் தன்றே
கருவது திரிய முதலெனு முருவும்
திரிதரூஉ முரியெனு மொழுக்கமும் திரியும்
திரிதலே மாற்றிப் பிறத்தலாய்த் திகழும்
காய மாயங் கழிதிற னிதுவே
பெற்றசிற் றின்பமே பேரின்ப மாகி
முற்ற வரூஉமென முழங்கிடு வேதம்
பிராணனே டபானனும் பேசிட நின்ற
கொடிநிலை வள்ளி வடுநீங்கிச் சமமுற
அசுத்த காம வுணர்ச்சியா யமைந்த
கந்தெனு மசுத்த வளியுங் கசடொரீஇ
அமல மாகி யருவாய்ச் சிவமாம்
ஊச லாட்டு முடலுயி ராயின
இயக்க வொருப்பா டினிதி னமைதரூஉம்
இருவினை சமமுற மலபரி பாகமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணங்கமழ் தெய்வத் திளநல மென்னும்
கந்தளி காட்டுங் கந்தருவ நெறியே
அசையா தசையு மமல நெறியாம்
பொன்னூச லாட்டம் பொலிதரத் திகழும்
வேதாந்த சித்தாந்த சமரச நெறியாம்
காமஞ் சான்ற கந்தழி யுருவே
கண்ணீர் மல்கிக் கசிந்து நாளும்
நாத வேத மோதுங் காதலாம்
மையலே காதலென மயங்கு முலகோர்
அசுத்த காமத்தா னலக்கணுற் றழிகுவர்
ஆவது மழிவது மொன்றினா லென்பது
தேவராஞ் சித்தர் திருவாக் கன்றே!
கடையா யுள்ளா யுடலக மரீஇய
என்பினு ளன்பா யின்பமாய்ச் சிவமாம்
கருவெனும் விந்தே குருநெறி தழீஇய
அரியசா தகத்தா லமலமா யுடலில்
''உணர்வெனும் பெரும்பதந் தெரி'' தர வுறைதலாம்
கடைக்கோ ளிதனாற் காமஞ் சான்றுழிக்
''கடக்களி றேற்றத் தடப்பெரு மத''மெனும்
விந்து மதமாம் இந்துமதந் திகழ
அன்பினில் விளையு மாரமு தமைய
மருளுறு காயமே மாசெனா பாசொரீஇ
ஏமஞ் சான்ற வீனமி லுடலெனும்
பேரின்ப நல்கும் பிரமக் கிழத்தியாம்
அன்பே யமிழ்தாய்ச் சிவமா யமைதரூஉம்
சாகாக் கல்விப் பயனா யுடலுயிர்
குருவெனுஞ் செம்பொனாய்க் குலவவே வாய்மைப்
பொருட் பேறுமெனப் புகன்றிடும் வேதம்
தேவியுந் தானுமா லீசனெமை யாளச்
சுண்ண மிடித்தலி னுண்மையு மிதுவே
பொன்மயன் சிவனெனும் பொருட்பொழிப் பிதுவே
உற்ற வாக்கையி னுறுபொரு ளாகிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தெனத் திகழுந் தாதுவே பொன்னும்
திருவடிப் பேரு யிருளினை யகற்றும்
பொருளெனும் பொன்னே பொய்யா விளக்கமாம்
நடுவதா மிதனா லிருதலையு மெய்தும்
தமிழுக் கிருவராய்த் தயங்கி முறையே
சாத லுறாத சாத லடைந்தே
கந்தழி பெறீஇக் கருது மிருநான்(கு)
ஊன நீங்கி யொழிவற வொன்றி
அசையா தசையு மமலநிலை யமைந்த
உயிரு முடனுமாங் கிழவனுங் கிழத்தியும்
அள்ளூ றாக்கையோ டமுத முண்டு
தவற்திற் கொருவராய்த் தம்பா லமைந்த
பசுகரண மெல்லாம் பதிகரண மாகி
அறம்புரி சுற்றமா யமைதரச் சிறந்த
குருநெறி பக்குவர் குறிகொளப் பயிற்றி
நித்தியம் பெறூஉ முத்திநெறி யிதுவே
இன்னன வேத வுண்மைகள் மலிந்த
பொருட்பான் மாண்பு புகலவும் பெரிதே!
தமிழியன் மாண்பு சாற்றவும் பெரிதே
தொன்மை சான்றவித் தொல்காப் பியத்துள்
அகத்திணை முதலா வமைந்தவைந் தியற்கும்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியர்
உலகிய னாடி யுஞற்றுபே ருரையினைப்
பலகாற் றுருவிப் பண்புற நாடிக்
காலநிலைக் குரிய கடப்பா டோர்ந்து
மாணவர் குழாமு மருவுமா சிரியரும்
மடனகன் றுணரத் தடைவிடை காட்டி
விளக்கமுற விசேடக் குறிப்புரை விரிவான்
உதவுபே ரறிஞ னாவன் யாரெனின்
செந்தமிழ் வழங்குந் திருநா டிதுவெனப்
போற்றுயாழ்ப் பாணப் புன்னையம் பதியிற்
சின்னைய விப்பிரன் செய்தவப் புதல்வனாய்க்
கோதிலாக் காசிப குலவிளக் கானேன்

சைவமுந் தமிழுந் தழைத்திட வருந்தொண்(டு)
ஆற்றிய நல்லூர் ஆறுமுக நாவலன்
மருகனாய் வித்துவன் மணியெனப் புகலும்
பொன்னம் பலவனாம் புலவனுஞ் சிறியேன்
தமிழா சிரியருட் டலைவ னாகிக்
கற்போர் யார்க்குங் கரவாது நாளும்
சொற்பொரு டெளிக்கும் தூய்மைசா லுளத்தாற்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தன பண்பிற்
சுன்னைவாழ் குமார சுவாமிப் புலவனும்
வரமுறு குரவராய் மன்னிட வுவர்பாற்
கலையெலா மினிது கற்றொருங் குணர்ந்தோன்
பண்டிதர்க் குரிய பரீக்ஷார்த் திகளாம்
மாணவர் பல்லோர்க் கோவாது பல்லாண்(டு)
அருநூல் பயிற்று மநுபவ வுறைப்பினன்
தொல்காப் பியமெனும் தொன்னூ
லுரைக்கெலாம்
விளக்கவுரை வரைந்த வித்துவப் பெரியோன்
தூக்கின் மெலியது தூக்கி மீக்கொள
வலியதே தாழும் வகைமை மான
அறிவுவீற் றிருக்குஞ் செறிவுடை யுளத்தாற்
பணிவுமின் சொல்லுமே யணியெனக்
கொண்டோன்
முத்தி வாயிலென முன்னுமுதற் படியாம்
வியாப்பிய வியாபக சந்தியாய் மிளிரும்
அகலிட மாக்க ளணுகுதற் கெட்டாப்
பூம்புக லூரெனும் புகலிடங் காட்டும்
புண்ணிய விமல புராண காரண
விநாயக னடியே விழுத்துணை யாகத்
தனாதுளங் கொண்ட தவநெறி யாளன்
இயற்றமிழ்ப் புலமையி னிணையிலாத் திராவிட
கலாநிதி யென்னும் கணேசவிப் பிரனே!
இந்நூ லுரையினை எழிலுற அச்சில்
அமைத்து வழங்கு மருந்தமிழ்த் தொண்டனாம்
பொன்னைய நாம மன்னிய குருசிறன்
தமிழ்மொழி யார்வமும் சால்புநனி யுடைத்தே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில்

# பண்டிதர் வ. மு. இரத்தினேசுர ஐயர்

இயற்றிய

பிரசங்க ரத்தின தீபச்

# சிறப்புப்பாயிரம்

**1923**

சீரா ருடுவை வளநகர் வாழுஞ் செழுமறையோன்
ஏரா ரிரத்நேச் சுரனெனும் பேர்கொள்
இயற்றமிழான்
பேரார் பிரசங்க ரத்தின தீபப் பெயர்புனைந்து
பாராரு மோரச் செயுநூற் பரிசு பகர்வரிதே.

**வேறு**

சுன்னைக் குமார சுவாமிப் புலவனுக்கே
மன்னு முரிமை மருவலால் — இந்நூலில்
சொல்லார் பெருநன்றி தோன்றுந் திறமுணர்ந்து
நல்லோர் உரைப்பர் நலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை

# மணக்குள விநாயகர் பதிகம் II

## 1936

### தரவுகொச்சகம்

இந்துமதஞ் சித்திபெற்றோ ரிடபவடி வினிற்றிகழும்
விந்துவெனும் பாற்கடலில் மெய்ஞ்ஞான வுருவாகிப்
புந்தியமர் பொருளாகி விக்கினங்கள் போக்கியருள்
தந்திமுக னே!புதுவை மணக்குளம்வாழ் தற்பரனே! (1)

பிரணவமாம் பேருருவே! பிரசன்ன முகமாகப்
புரணசது மறைகளே போற்றுசதுர்ப் புஜமாக
மரணமிலா நெறிகாட்டி வழியடியார்க் கருள்புரியும்
சரணபதாம் புஜபுதுவை மணக்குளம்வாழ் தயாநிதியே!

இருவினையுஞ் சமம்பெற்றே இலகுமல பரிபாகம்
வருபிரம சரியமெனு மறையொழுக்கின் தலைநின்றோர்
மருவுவர்நின் பதமென்றால் மறைமுதல்வன் நீயன்றோ!
தருவளர்பூம் பொழிற்புதுவை மணக்குளம்வாழ்
தத்துவனே! (3)

வித்தகமா ரேகதந்த விநாயகனே! விமலையாம்
உத்தமியாள் முகபதும மலர்விக்கும் ஒண்சுடரே!
பத்தர்கள்வேண் டியவெல்லாம் பாலிக்கும் கற்பகமே!
நித்தியனே! புதுவைநகர் மணக்குளம்வாழ் நின்மலனே!

விமலவிண்டு வடிவான விநாயக! நின் அடிபோற்றி
அமலசிவ வடிவாகும் ஐங்கர! நின் அடிபோற்றி
துமிலமறை முடிவாகும் சுடரே! நின் அடிபோற்றி
கமலமலர் மணக்குளம்வாழ் கோவே! நின் அடிபோற்றி

கணங்களுக்கு நாயகனே! கவிகளுக்கும் கவியானாய்!
குணங்கடந்த தனிப்பொருளே! கோலமறைப்
பொருளானாய்!
பிணங்குவினை தீர்த்தெம்மை ஆண்டருளாய் பெருமானே!
மணங்கமழும் பொழிற்புதுவை மணக்குளத்து
விநாயகனே! (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலாரி திரோதானத் திருவடியிற் கலந்தொடுங்கும்
சேலாருந் திருவிழியாள் மாரிமுத்தாம் சேயிழைதன்
நாலாண்டு நிறைவுவிழா நலந்திகழ அருள்புரியாய்
காவாறு தேன்சொரியு மணக்குளம்வாழ் கணபதியே! (7)

சித்திபுத்தி அருளுதலாற் சித்திபுத்தி தலைவனென
வித்தகர்போற் றிடும்வேத விழுப்பொருளாம்
ஐங்கரனே!
பத்திநெறி தழுவியபூம் பாவையாம் மாரிமுத்து
புத்துயிர்பெற் றிடவருளாய் மணக்குளம்வாழ்
புண்ணியனே! (8)

அமுதமய மானதிரு உருவே! உன் அடிபோற்றி
திமிதநட மிடுபரமன் சேயே! உன் அடிபோற்றி
தமிதமடி யார்க்கருளும் தாயே! உன் அடிபோற்றி
குமுதமலர் மணக்குளம்வாழ் கோவே! உன்
அடிபோற்றி. (9)

சாதவே முத்தியெனுஞ் சழக்குநெறி நிலைபாறப்
போதமார் சிவநெறியே பூதலத்தில் நனிவீற
நாதனுந் திருநந்தி வடிவாகி நண்ணிடுவாய்!
மீதுலகுந் தொழும்புதுவை மணக்குளத்து விநாயகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை

# மாரிமுத்தம்மையார் பதிகம் I

## 1935

### தரவுகொச்சகம்

வேதவொலி சிறந்திடலால் விழுத்தொண்டை
நாட்டுறலால்
வேதவடி வாமிறைவன் வேதவுண்மை வழங்குதலால்
வேதபுரி யெனப்புகலும் வியன்புதுவை வளம்பதியோர்
மாதுயர மகன்றுயநீ வருவதன்றோ மாரிமுத்தே! (1)

புதுவையே பெருந்துறையாம் புதுவையே புகலிடமாம்
புதுவையே எம்பெருமான் புதுவைதிக ழிடமென்றால்
புதுவையிற்புத் துயிரொடுநீ போதருதல் வியப்பாமோ?
புதுவையோர் தவப்பயனும் பூம்பாவாய்! மாரிமுத்தே!

மோனகுரு பரன்கயிலை முதற்குரவன் திருநந்தி
வானவருந் தொழும்புதுவை மாநகரிற் புதுமைபல
தானருளு மென்னுவிச் சகமறியப் புத்துயிர்பே(று)
ஆனதுமொன் றகாதோ! ஆரறிவார் மாரிமுத்தே! (3)

அங்கமெனு முடலுயிர்க ளமலமடைந்
தருள்வடிவாய்த்
துங்கபர லிங்கமுடன் தோய்தலே முத்தியெனும்
பங்கமிலாச் சிவநெறியிப் பாரகத்து நிலைநாட்ட
மங்கயருக் கரசியென வருவதென்றோ! மாரிமுத்தே! (4)

திம்பாடு முளத்தமணர் தீநெறிகள் பாழாகக்
காம்பாடுந் தோளுமையாள் கான்முளையாங்
கவுணியனால்
பூம்பாவை புத்துயிரிற் போந்ததொண்டை வளநாட்டு
மேம்பாடிவ் வுலகறிய விளக்குவையோ! மாரிமுத்தே!

அம்பலத்தி லாடுமைய னருண்மொழியும் பொய்யாமோ!
செம்பலமா நீபுரிந்த திருப்பணிக ளறியானோ!
இம்பருமும் பரும்போற்ற வெழுந்தருளி வாரானோ!
வம்பலர்பூங் குழலணங்கே! பூம்பாவாய்! மாரிமுத்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுவரு வாய்கொல்லோ ! எனவெதிர்பார்த்
திரங்குகின்முர்
அன்றியபே ரன்புடைய சோதரரே முதற்கேளிர்
நன்றவர்தாங் களிகூர நயந்துவரல் எந்நாளோ !
மன்றனடிப் பணிமறவா மாண்புடைய மாரிமுத்தே ! (7)

"வித்தக"த்தால் வேதவுண்மை மேதினியோ ரினிதுணர
மெய்த்தொண்டு புரிநாக ரத்தினவேள் விமலனுள்
புத்தமுதிட் டயர்விழவு காணுயோ ! பூம்பாவாய் !
வித்தகர்வாழ் புதுவைநகர் விளக்கவரு மாரிமுத்தே ! (8)

விண்ணவர்பல் லாண்டிசைப்ப மேதினியோர்
குதூகலிப்பப்
புண்ணியர்க்குப் புதுவையே புகலிடமாய்ப்
பொலிந்திலங்க
அண்ணலாந் திருமூல னருண்மரபு தழைத்தோங்க
நண்ணுவதென்ருே ! புதுவை நாயகியே ! மாரிமுத்தே !

சித்தர்புகழ் புதுவைநகர்த் திறம்பாடுந் திருத்தொண்டு
பத்திநெறி தழுவாத பாவியேற் கெளிதாமோ
புத்துயிரோ டுணைத்தருதல் புதுவையெனும்
பெருந்துறைவாழ்
சித்தனுக்கும் அரிதாமோ ! சிவக்கொழுந்தே !
மாரிமுத்தே ! (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை

# மாரிமுத்தம்மையார் பதிகம் II

1936

தரவுகொச்சகம்

மதிதவழுஞ் சடைமுடியோன் வரநந்தி திருப்பணியே
கதியருளு நெறியென்னக் கடைப்பிடித்த காரிகையே!
யதுகுலத்து நாயகியே! யாம்காண வருவதென்றோ?
புதுவைநகர் சிறக்கவரு பூம்பாவாய் மாரிமுத்தே! (1)

நூலாண்ட மறைமுடிவில் நுவலுமொளிப் பிழம்பாகிக்
கோலாண்ட நிறையுருவாங் குருநந்தி யருளாலுன்
நாலாண்டு நிறைவுவிழா நமர்புரிவ தறிந்திலையோ?
வேலாண்ட விழியணங்காம் மெல்லியலே! மாரிமுத்தே!

வேதவுண்மை உலகுய்ய வெளிப்படுத்தி எமையாளும்
நாதனுந் திருநந்தி நல்லருளாற் புத்துயிரிற்
பூதலத்தோர் கண்டுதொழப் போதருதல் எந்நாளோ?
மாதரசே! புதுவைநகர் வாழவரு மாரிமுத்தே! (3)

ஆதியா மெம்மிறைவன் அருண்மொழியும்
பொய்யாமோ?
தீதிலாக் கேளிரெலாம் செயலற்றே இரங்குகின்றார்
நீதியோ வவர்வருந்த நிலத்துறங்கல் நினக்கழகோ?
மாதவரும் தொழுதேத்த வருவதென்றோ மாரிமுத்தே!

மன்னுபுகழ் 'வித்தக'த்தால் மறையுண்மை
வெளிப்படுத்தும்
தன்னையனும் திருநாக ரத்தினனுந் தாயரொடு
நுன்னியசோ தரர்கேளிர் துயரொரீஇக் களிகூர
இன்னினியுந் தாமதமோ! எழுந்தருளாய் மாரிமுத்தே!

பாதிமா தொடுநிலவும் பண்ணவனுங் காமேசன்
பூதகணம் புடைசூழப் புத்தேளிர் போற்றிசைப்பத்
தீதகல யாமெல்லாந் திருவடிகண் டுய்ந்திடவே
மாதரா யுன்பொருட்டால் வாராதோ மாரிமுத்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெங்குஞ் செவியுடையான் கண்ணுடையான்
எம்பெருமான்
மங்கையுமை குயின்மொழியாள் வாமமுறுங் காமேசன்
மங்கவிலா நின்கேளிர் வருந்துவதும் அறிந்திலனோ
கொங்கலரு மலர்க்கூந்தற் கோகிலமே! மாரிமுத்தே! (7)

முன்னரிய திருக்கயிலை முதற்குரவன் திருவருளால்
மன்னியபுத் துயிரொடுநீ வந்திடுதல் வாய்மையென்றால்
மன்னுலகோர் வழுத்துவதுன் புகழன்றோ மாசில்லாக்
கன்னிகையே! புதுவையர்தங் கண்மணியே!
மாரிமுத்தே! (8)

நரைபிணிமூப் பொடுமரண நண்ணாமே உடலுயிர்கள்
உரையிறந்த அருளொளியால் ஒடுங்குதலே
முத்தியெனும்
புரையறுதொல் சிவநெறியிப் பூதலத்து விளங்கிடநீ
வருவதென்றோ! புதுவை நகர் வாழ்வுகந்த மாரிமுத்தே!

அன்புநெறி யாலிறைவன் அருட்கிலக்காம் நின்மாண்பு
புன்புலால் உடலுயிர்கள் இயக்கநிறை பொருந்தாது
வன்புலாம் அழுக்குமன வஞ்சனேன் தரத்ததோ?
பொன்குலாந் திருவுருவப் பூம்பாவாய் மாரிமுத்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னுகம்

# குமாரசுவாமிப் புலவர் பேரிற்

பாடிய

# இரங்கற் பாக்கள்

## 1925

### நேரிசை வெண்பா

செந்தமிழ்தேர் மாணவரும் செய்ய தமிழணங்கும்
நொந்து புலம்புதிற நோக்கரிதே — அந்தமில்சீர்ச்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனரன்
பொன்னுலகம் புக்கமர்ந்த போது. (1)

### மன்னைக்காஞ்சி

சுன்னைநகர் மேய சுகுணன்மன் செந்தமிழும்
மன்னு வடநூலும் வல்லவன்மன் — பன்னும்
குரவர் பிரான்மன் குமார சுவாமி
வரகவிமன் மாதவத்தோன் மன். (2)

### கட்டளைக் கலித்துறை

மன்னிய செந்தமிழ் நூலுட ஞரிய மாமொழியில்
துன்னும் பலகலை நுண்பொருள் யாவர்க்குஞ்
சூழ்ந்துரைத்துத்
தன்னைப் பவரித் தமிழ்நாட்டிலரெனச் சாற்றநின்றேன்
சுன்னைக் குமார சுவாமிப் புலவர் தொழுங்குருவே. (3)

அரும்பொருட் டண்டி யலங்கார நம்பி யகப்பொருளே
திருந்திய காரிகை ராமா யணமுதற் செந்தமிழ்நூற்
பொருந்திய நுண்பொருள் நன்கு தெளிந்த
புலமையினேன்
மருந்துறழ் கேள்விக் குமார சுவாமி மகிபதியே. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யி லுளத்தன் புலமையின் மேம்படு
புண்ணியத்தோன்
வையம் புகழும் உபகாரி சீலன் மறைமுடிவாஞ்
சைவந் திகழும் பலவாண வள்ளல் தவப்புதல்வன்
செய்யன் குமார சுவாமிப் புலவர் சிகாமணியே. (5)

தீஞ்சுவை யாருங் கவியால் திருத்தக்க தேவனென்கோ?
மேம்படு நல்ல அறிவால் ஒழுக்க விழுப்பத்தினல்
தாம்பிற ரொவ்வாத் திருவள் ளுவரெனச் சாற்றிடுகோ?
பூம்பொழிற் சுன்னைக் குமார சுவாமிப் புலவனையே.

சாலித் தடவயல் சூழுஞ்சுன் னகத் தனிநகரான்
மாலுக் கரிய மலரடிக் கன்பன் வரம்பிலவாம்
தோலென் றிலகுதொன் னூறேர் குமார சுவாமியில்லை
போலிப் புலவருக் கேயினிக் காலம் புகன்றிடினே. (7)

முன்னூறு மாறு முகநா வலனில்லை மூதுணர்ந்த
பொன்னம் பலப்பெயர்த் தேசிக னில்லைப் புலமைநிறை
சுன்னைக் குமார சுவாமியு மில்லைத் தொல்புவியில்
என்னே இனியார் தமிழ்நூ லுரைக்கு மியல்பினரே. (8)

சீரார் தணிகைப் புராண முதலாஞ் செழுந்தமிழ்நூல்
ஆராய்ந் தெமக்குமுன் னோதிய நீர்மை யறிந்துநிதம்
ஏரா ரிறைவ னடிமலர் வாழ்கவென் றேத்தலன்றி
நேரார் குமார சுவாமிக்குச் செய்வதென் நேருறவே.

நேரிசை வெண்பா

சுன்னைக் குமார சுவாமிப் புலவர்பிரான்
மன்னுந் தமிழ்வளர்த்து வான்புகழைத் — துன்னினன்
தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

# திரு. தி. த. கனகசுந்தரம்பிள்ளை பேரிற்

பாடிய

# இரங்கற் பாக்கள்

**1923**

**நேரிசை வெண்பா**

செந்தமிழ்நூல் முற்றுமுணர் சீரார் புகழ்க்கனக
சுந்தரவேள் வாழ்க்கை துறந்ததனுற் — செந்தமிழாம்
மாதாரும் நொந்து வருந்தினளே பாவலரும்
ஆதார மற்றனரே யாம். (1)

தொல்காப் பியமுதலாம் தொன்னூல் விழுப்பொருளும்
பல்காப் பியமும் பலர்க்கருள — வல்லவனும்
சொல்லார் திறற்கனக சுந்தரன்போல் இவ்வுலகில்
நல்லா ருளரோ நமக்கு. (2)

புத்திரர்கள் செவ்விகண்டுன் புந்திநிலை கண்டுணர்ந்தேன்
துத்தியஞ்சேர் நற்கனக சுந்தரனே! — எத்திறத்துந்
தக்கார் தகவிலர் ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவரக வெளியீட்டு நூல்கள்

## இந்நூலாசிரியர் இயற்றியன

### செய்யுள் நூல்கள்

| | | ரூ: ச: |
|---|---|---|
| 1. | மயிலணி அந்தாதி | -50 |
| 2. | கண்ணகி வெண்பா | -40 |
| 3. | காசியாற்றுப்படை | -35 |
| 4. | மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை | -35 |
| 5. | சந்திரசேகரப்பிள்ளையார் இரட்டை மணிமாலை | -15 |
| 6. | நினைவுப் பாமாலை | -10 |

### வசன நூல்கள்

| | | |
|---|---|---|
| 7. | குமாரசுவாமிப்புலவர் வரலாறு | 6-50 |
| 8. | புலவர் நினைவுகள் | 1-00 |
| 9. | மகாத்மா காந்தி | -35 |
| 10. | சிவசம்புப்புலவர் சரித்திரம் | -30 |
| 11. | முருகதத்துவம் | -25 |

### தொகுப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 12. | முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு | 1-50 |
| 13. | முத்துக்குமாரகவிராயர் பிரபந்தத்திரட்டு | 1-00 |
| 14. | பண்டிதர் கந்தையாபிள்ளை கவித்திரட்டு | 1-50 |
| 15. | தோத்திர மஞ்சரி | 1-25 |
| 16. | முருகன் திருப்புகழ் மாலை | 1-00 |

### பதிப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 17. | தமிழ்ப் புலவர் சரித்திரம் | 5-00 |
| 18. | மாவைப் பதிகம் | -10 |
| 19. | ஐயனார் ஊஞ்சல் | -10 |

புலவரகம், மயிலணி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தையாப் பண்டிதர்

இயற்றிய

## " ஜோர்ச்மன்னர் இயன்மொழி வாழ்த்து "

என்னும் நூலைப் பற்றிய

# மதிப்புரை

" சங்க நூல்கள் எல்லாம் எங்களுக்கு இன்னும் புதுப் பாடமாகவே இருக்கத் தங்களுக்கு அவை பழம்பாட மாகி ஏவல் செய்து நிற்பது வியப்பினும் வியப்பே! தங்களைக் கீரன் என்பேனோ? கபிலன் என்பேனோ? மருதனிளநாகனார் என்பேனோ? யார் என்று கூற அறியேனாய் இடர்ப்படுகின்றேன் "

செல்வக்கேசவராய முதலியார்
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

" சங்கச் சான்றோர் பாடல்கள் போலப் பாட்டுக்களை இயற்றுவோர் தற்காலத்தும் உளர் எனின், அவர் தாங்களே என்பது மிகையன்று ".

ந. மு. வேங்கடசாமி நாட்டார்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
பிஷப் கீபர் கல்லூரி,
திருச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org